விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 03 புதன்கிழமை (17.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

SATS-TECH ENGINEERS

T20 ICC WORLD TWENTY20 ENGLAND09

Now available in dishtv & sundirect

New packages & Renewal

Call :-222 5908 / 222 8812

# தீர்வை அண்மித்திருந்த வேளை யுத்தம் ஆரம்பித்து விட்டது!



## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

இலங்கை இனப்பிரச்சினை சமாதானத்தை மிகவும் அண்மித்துக் கொண்டிருந்தபோதே விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் மோதல்கள் ஆரம்பித்ததாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கூறினார். (14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் செயலாளர்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(திருகோணமலை)

யாழ்.மாவட்ட விசேட செயலணிக் கூட்டத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் இன்று யாழிற்கு வருகை தரவுள்ளனர்.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடான யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்த விசேட செயலணிக் கூட்டம் நாளை யாழ். செயலகத்தில் (14ஆம் பக்கம் பார்க்க)

## மனப் பிரமையின் வெளிப்பாடே நாடுகடந்த தமிழீழ அரசமைப்பு!

### அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்காலிக தமிழீழ அரசுத் திட்டம் மனப் பிரமையின் வெளிப்பாடு எனக்கூறியுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் பாலித கோஹன, தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க தமது அமைச்சரவையில் தமிழ் அமைச்சர்கள் இருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் பல தமிழ் உறுப்பினர்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பி.பி.சிக்கு தெரிவித்ததாவது; (14ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலை குண்டுதாரிகள் 26 பேர் கொழும்பு நகருக்குள் ஊடுருவல்!

### பொலிஸார் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை உறுப்பினர்கள் 26 பேர் இன்னமும் கொழும்பு நகரில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 4 பேர் விசேட பொலிஸ் குழுவொன்றால் கைது செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் அந்த அமைப்பின் தற்கொலைப் படை உறுப்பினர்கள் பலர் இன்னமும்கொழும்பு நகரில் இருப்பதாகப் புலனாய்வுத்தகவல்களை (14ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருட்களை ஏற்றிய 22 லொறிகள் இன்று யாழ்.வரும்

(கொழும்பு)

கோதுமை மா,சீனி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 22 லொறிகள் அநுராதபுரத்தில் சோதனையிடப்பட்டு ஓமந்தைவரை செல்ல நேற்று பாதுகாப்பு அமைச்சு அனுமதித்துள்ளது.

மேற்படி 22 லொறிகளில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11 லொறிகளும் மிகுதி தனியார் வர்த்தகர்களின் லொறிகளும் அடங்குகின்றன.

இவ் லொறிகள் நேற்று இரவு ஓமந்தை வரை அழைத்து வந்த படையினர் இன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட அனுமதி அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

ஏனைய (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு மியன்மார் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக கடந்த 14 ஆம் திகதி மியன் மாருக்கு விஜயம் செய்த ஜனாதிபதி இந் நாட்டின் தலைவர், பிரதமர் உட்பட உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்து இரு (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

✸ க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான இரசாயனவியல்-I,II பாட மாதிரி வினாத்தாள்

✸ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆனி மாதப்பலன்கள்.

### நாளை

கொழும்பு பிரபல ஆசிரியர் எஸ்.ஏ.சந்திரபவனின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-02

## உணவையும் உடையையுமே முகாம் மக்கள் கேட்கின்றனர்

### ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்மக்கள் இன்று உணவையும் உடையையும் மாத்திரமே கோருகின்றார்கள். அவர்கள் அதிகாரப் பரவலாக்கலையும் அரசியல் தீர்வையும் கேட்க வில்லை. எனவே அதிகாரப் பரவலாக்கலும் அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை என ஜாதிக ஹெல உறுமய தேரர்கள் பகிரங்கமாக கூறிவருகின்றனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## கலாசார சீரழிவில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை!

### அரச அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கலாசார சீரழிவு விடயங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முளைவிடும் கலாசார சீரழிவுகள் குறித்து கடந்த 12 ஆம் திகதி 'மிகப் பெரும் சீரழிவை யாழ்ப்பாணம் சந்திக்கும்' என வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுபவர்கள் மீதும், வீதிகளில் செல்வோருக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவும் கடுமையாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர், யாழ். பொலிஸ் அத்தியட்சகருக்கு அறி வுறுத்தியுள்ளார். (ந-5)

## நாடு கடந்த தமிழீழ அரசுக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

### உருத்திரகுமாரன் தெரிவிப்பு

(வொஷிங்டன்)

இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் தமிழர்கள் பங்கு பெறுவது சாத்தியம் அற்றதாகிவிட்டதால், அந்தத் தீவுக்கு வெளியிலேயே தமிழர்கள் தமது உரிமைகளை நிலை நாட்டுவதற்கான முன்னெடுப்பு முயற்சிகளைத் தற்போதைக்குத் தொடர முடியும். எனவேதான் -அனைத்துலக சட்ட மரபு நெறிகளுக்கு அமைவாக-தாயகத்திலும் வெளிநாடுகளிலும் பரவி வாழும் தமிழீழத் தவர் கள் தற்பொழுதிற்கான 'நாடு கடந்த தமிழீழ அர சாங்கம்' ஒன்றினை உருவாக் குதல் அத்தியா வசியம் என கருதுகின்றார்... என அந்த அர சாங்கத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ள செயற்குழுவின் தலைவர் வி.உருத்திர குமாரன் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

# உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு !

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட தமிழர் விடுதலைக்கூட்டணிமுடிவுசெய்துள்ளதாக வீ. ஆனந்தசங்கரியின் செயலாளர் இரா. சங்கையா தெரிவித்துள்ளார்.

இப்போதுவன்னியில்இருந்து இடம்பெயர்ந்து சொல்லொணாத் துயரத்துடன் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் எமது மக்களின் வேதனைகளைத் துடைத்து அவர்களுக்கு ஒரு நல் வாழ்வினை அமைத்துக் கொடுக்க வேண்டிய மிகப்பாரிய பொறுப்பினை மேற்கொள்ள வேண்டிய தருணத்தில் தேர்தலை நடத்துவதில் எமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் இந்த அசாதாரண சூழ்நிலையில் எம் மீது தேர்தல் திணிக்கப்பட்டுள்ளதால் தேர்தலில் போட்டியிட வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே யாழ். மாநகரசபைத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட விரும்பும் எமது கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் அனைவரும் எமது அலுவலகத்துக்கு வந்து நேரடியாக விண்ணப்பங்களை கொடுத்து விபரங்களை அறிந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (சு)

# சீன உல்லாசப் பயணிகளைக் கவர இந்தியாவும் இலங்கையும் கூட்டு

(கொழும்பு)

இந்தியாவும் இலங்கையும் இணைந்து உல்லாசப் பயணத்துறையை விரிவுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இலங்கையின் உல்லாசப் பயணத்துறை வரலாற்றில் முதல் தடவையாக இந்தியாவும் இலங்கையும் இணைந்து தமது உல்லாசப் பயணத்துறையை விரிவுபடுத்தும் முயற்சிகளை மேற் கொண்டுள்ளன.

சீன நாட்டு உல்லாசப் பயணிகளை தமது பிராந்தியத்துக்கு கவர்ந்திழுக்கும் முயற்சி களை அவர்கள் கூட்டாக முன்னெடுத்து வருகின் றனர்.

இது தொடர்பாக இலங்கை உல்லாசப் பயணத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் சீனாவுக்கான இந்தியத் தூதுவர் நிருபாம ராவ் ஆகியோர் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

உல்லாசப் பயணத்துறைக்கு இலங்கை சிறந்த இடம் என்ற பிரசாரத்தை தாம் முன்னெடுக்கப் போவதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனாவைக் குறிவைத்தே உல்லாசப் பயணத்துறை செயற்பட்டு வருவதாக மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

சீனாவின் உல்லாசப் பயணத்துறை புள்ளி விபரங்களின்படி 4.5 மில்லியன் மக்கள் உல்லாசப் பயணிகளாக ஆண்டு தோறும் பயணம் செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளது. 1971 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஜனாப் ஏ.எச்.எம். ஜவருல்லா 100 மீ ஓட்டப் போட்டி, நீளம்பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய மூன்றிலும் தேசிய மட்டத்தில் முதலாம்இடத்தை தனதாக்கி மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்று கொடுத்து கல்லூரிக்கு பெருமையும் புகழும் சேர்த்தார்.

1972 ஆம்ஆண்டு அகில தேசிய ரீதியாக பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் எஸ். கரன்சிங் தடி ஊன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் முதலாம்இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் தனதாக்கிக் கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

இவ்விரு சாதனைகளும் அதிபர். இ. சபாலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பெறப்பட்டதாகும். மூன்று வருடங்களின்பின் 1975ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான 17 வயதுக்குட்பட்டோர் மெய்வல்லுநர்போட்டியில் சண் தயாளன் தடி ஊன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைச் சுவீகரித்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

1977 ஆம் ஆண்டு அகில இலங்கை.ரீதியாக பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிய மெய்வல்லுநர் போட்டியில் ரி. ரவீந்திரன் 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தடி ஊன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத் தைக் பெற்றுக் கொடுத்தார்.

அதே ஆண்டு (1977) மீண்டும் சண். தயாளன் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஈட்டி எறிதல், தடிஊன்றிப்பாய்தல் என்ற இரு நிகழ்ச்சிக ளிலும் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றது மட்டுமின்றி சாதனையும் நிகழ்த்தி இரு தங்கப் பதக்கங்களைப் பெற்று கல்லூ ரிக்கு பெருமை சேர்த்தார்.

தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக் செ. இ.ராதாகோபாலன் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உயரம் பாய்தலில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

1979 ஆம் ஆண்டு எஸ். ரவீந்திரன் அகில இலங்கை ரீதியாக 19 வயதுக்குட்பட்டோர் மெய்வல்லுநர்நிகழ்வில் முப்பாய்ச்சல், தடி ஊன்றிப் பாய்தல் ஆகிய இரு நிகழ்ச்சிகளி லும் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று இரு தங்கப் பதங்கங்களைப் பெற்றுக் கொடுத் தார்.

குறிப்பிட்ட ஐந்து ஆண்டுகளிலும் கல் லூரியின் புகழ்பூத்த அதிபர் வி. குமார சுவாமி அவர்களின் காலத்தில் நிகழ்த்தப்பட்டவையாகும்.

சுமார் 30 வருடங்களின் பின் இவ் வாண்டு (2009) தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட அமைச்சூர் மெய்வல்லுநர் சங்க இளையோருக் கான மெய்வல்லுநர் போட்டியில் 21 வயதுக் குட்பட்டோர் பிரிவில் எஸ். வாகீசன் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங் கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

**ச. நிமலன்**
**மெய்வன்மைத்துறைப் பொறுப்பாசிரியர்.**

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மட்டுமின்றி ஏனைய வெளிக் கழகங்களைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் 2008 ஆம் ஆண்டுஅகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட பாடசாலை மெய்வல்லு நர் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய அதிபர் வீ. கணேசராசா அவர்களின் காலப் பகுதியில் இந் நிகழ்வு நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ் மாநகர சபைக்கு சபா மண்டபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு நவீன வசதிகளுடன் கூடிய சபா மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சபா மண்டபத் தினை அமைக்கும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சபா மண்டபம் அமைக்கும் பணியை தேர்தலுக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# போசனைக் கண்காட்சி

(சித்தன்கேணி)

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் பாடசாலை சுகாதார கழக மாணவர்களும் சுகாதார பிரிவினரும் இணைந்து இன்று புதன்கிழமை ஒரு மணிக்கு போசனைக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சுகாதாரக் கழகம் கேட்டுள்ளது. (ச-14)

# வைரஸ் தொற்றுக்கு இலக்கான சிறுவன் வத்தளையில் கண்டு பிடிப்பு

(கொழும்பு)

வைரஸ் தொற்றுக்கு இலக்கான 8 வயது சிறுவன் ஒருவன் வத்தளை பகுதியில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தகவலொன்றை அடுத்தே இச்சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தகவலொன்றை அடுத்தே வைரஸ் தொற்றுக்கு இலக்கான சிறுவனை கண்டுபிடித்துள் ளதாகவும் அவருக்கு கொழும்பு ஐ.டி.எச்.வைத்தியசாலையின் பிரத்தியேக அறையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலையின் அதிகாரிகள் தெரிவித் தனர்.

அவுஸ்திரேலியாவிலிருந்து சிங்கப்பூர் ஊடாக இலங்கைக்கு வருகை தந்திருந்த குடும்பத்தைச் சேர்ந்தவரே வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருப்பதாக தெரியவருகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவனுக்கு இன்பென்ஸா ஏ எச் வன் என்ற வைரஸ் தொற்றுக்கே இலக்காகியிருப்ப தாக வும் கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை சிறுவனின் தந்தை மற்றும் சகோதரியை பரிசோதனைக்கு உட்படுத்து வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# மாகாணப் போட்டிகளில் பங்கு பற்றும் முதல் கட்ட மாணவர்கள் நாளை பயணம்

(யாழ்ப்பாணம)

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கான ஒழுங்குகளையும் மன்னாரில் தங்கும் மாணவர்களுக்கான உணவு வசதியையும் சமூக சேவைகள் மற்றும்சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற் கொண்டுள்ளார்.

இப் பயண ஏற்பாட்டில் முதலாம் கட்டமாக செல்லுகின்ற மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள் யாவரும் நாளை 18 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

மேலும் விபரங்களை அறிவதற்கு முதலாம் கட்டத்தில் செல்கின்ற பொறுப்பாசிரியர்கள் வலிகாமம் கல்வி வலயத்துடன் 021 222 4043 என்ற தொலைபேசி இலக்கத்துடன் இன்று புதன்கிழமை பகல் 12 மணிக்கு பின் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ச)

# நாடு கடந்த தமிழீழ அரசுக்கான ...

இது தொடர்பாக நேற்று செவ்வாய்க் கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தச் செயற்பாட்டுக் குழுவின் ஆலோசகர்களாக இயங்குவதற்கு முன்வந்துள்ள பல்துறைநிபுணர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளார்.

மானிடம் பேணும் சட்ட நெறிகளையும் மனித நாகரிகத்தின் அனைத்துப் பண்புகளையும் முற்று முழுதாக மீறி கொடூரமிக்க அதீத இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் சிங்கள அரசு தமிழ் மக்களின் நியாய பூர்வமான தன்னாட்சித் தீர்மான முன்னெடுப்புகளை நசுக்கி சிதைத்துள்ளது.

வன்னிப் பிராந்தியத்தில் தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொலை களரியானது முழு உலகையுமே பேரதிர்ச்சியிலும் ஆழ்ந்த வேதனையிலும் அமிழ்த்தியுள்ளது.

இலங்கை அரச அமைப்பிலும் அதன் யாப்பு முறையிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஆக்கபூர்வமான பயன் தரு வகையில் முன்னெடுப்பதற்கான எத்தகைய அரசியல் வழியும் இல்லை.

இத் தீவில் தமிழர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வழி எதுவுமே இல்லை. எனவே இலங்கை தீவுக்கு வெளியிலேயே தமிழர்கள் தமது உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான முன்னெடுப்பு முயற்சிகளை தொடர முடியும்.

ஆகவே தமிழீழத்தில் வாழும் மக்களும் வெளிநாடுகளில் பரவி வாழும் தமிழீழத்தவர்களும் தற்பொழுதிற்கான நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றினை உருவாக்குதல் அத்தியாவசியமான மிக முக்கிய பணி எனக் கருதுகின்றார்கள்.

இலங்கையில் தொடர்ந்து நிகழும்இனப் படுகொலையினை நிறுத்து முகமாக அனைத்துலக அரசுசார் நிறுவனங்களுடனும் அரச சார்பற்ற அனைத்துலக நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படுவதனையும் இக்குழு தனது பணியாக கொண்டுள்ளது.

இச் செயற்பாட்டுக் குழுக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் பணியில் நாம் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

இச்செயற்பாட்டுக் குழுவுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக பல்துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சொர்ணராஜா (பிரித்தானியா), பேராசிரியர் பிரான்சிஸ்பொய்ல் (அமெரிக்கா), பேராசிரியர் பி.இராமசாமி (மலேசியா),

பேரா சிரியர் நடராசா சிறிஸ்கந்தராசா (சுவீடன்), கலாநிதி முருகர் குணசிங்கம் (அவுஸ்ரேலியா), மருத்துவ கலாநிதி சிவனேந்திரன் சீவநா யகம்(அவுஸ்ரேலியா), கலாநிதி வசந்தகுமார் (பிரித்தானியா), சட்ட அறிஞர் கரன் பார்க்கர் (அமெரிக்கா), செல்வா சிவராசா (அவுஸ்ரேலியா ), போல் வில்லியம்ஸ் (நெதர்லாந்து ), பேரா சிரியர் பீற்றர் சால்க் (சுவீடன்) ஆகியோர் இந்த ஆலோசனைக் குழுவில் இணைந்து பணியாற்ற முன்வந்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கும் இச் செயற்திட்டத்துக்குரிய குழுக்களில் இணைந்து பணியாற்ற முன்வருமாறு ஆர்வமுள்ள அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இக் குழு 2009 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் நாள் வரை செயற்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திகதி வரையிலான செயற்பாடுகளை இக் குழு அறிக்கையாக சமர்ப்பிக்கும்.

இத் திட்டம் தொடர்பாக தமிழ் மக்களினது ஆக்க பூர்வமான கருத்துக்களை வரவேற்கிறோம் என்றுள்ளது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## எப்பொழுதும் பிஸி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறார். அப்படி ஒன்றும் பெரிய நெருக்கடியான வேலை இல்லை. இருந்தாலும் எந்த நேரம் போய்ப்பார்த்தாலும் பிஸியாக இருப்பது போல் காட்டிக் கொள்ளுவார். அப்படி ஒரு சுபாவம் அவருக்கு.

''சேர்... உங்களைத்தான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்று சொன்னால் போதும்.

உடனே "கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு மேசை மேலிருக்கும் பைல்களை எல்லாம் எடுத்துப் பரபரவென்று திருப்புவார், அடுக்குவார்.

யாருக்காவது போன் பண்ணுவார். மறுபடியும் வைப்பார். எடுப்பார்.

இப்படி ஏதாவது செய்துவிட்டு '' ம்... இப்ப சொல்லுங்க... என்ன விடயம்?''என்பார்.

வெளியிலிருந்து யாராவது போன் பண்ணினால் அதனை எடுத்து உடனே பேசமாட்டார். கையில் கொஞ்ச நேரம் எடுத்து அப்படியே சும்மா வைத்திருப்பார். அதன் பின்னர் தான் பேசுவார். அப்பொழுதுதான் இவர் பிஸியாக இருக்கிறார் என்று போன் பண்ணுபவர்கள் நினைப்பார்களாம். இப்படிப்பட்டவர்களை நீங்களும் சில இடங்களில் பார்த்திருக்கலாம்.

பிஸியாக இருப்பதாக நடிக்கும் பழக்கம் இப்படியே நீடித்தால் பின்னாளில் பெரிய மனநோயாளியாகக் கூட ஆகலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்.

இவர்கள் நடிக்கிறார்கள் என்பதை தெரிந்தவர்கள் இவர்களை கேலியாக பார்ப்பார்கள். அப்படிப் பார்ப்பது கண்ணில் பட்டுவிட்டால் அது இன்னமும் மனவருத்தமாகிவிடும். இப்படியானவர்களைப் பற்றி மனோதத்துவ டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

இவர்களெல்லாம் பதவியில் அவர்கள் விரும்பும் காரியங்களையும் அந்தஸ்தையும் பெற முடியாத சூழ்நிலையில் தங்களுடைய 'ஈகோ' வைக் காப்பாற்றுவதற்காக இப்படிச் செய்கிறார்களாம்.

மனிதனுடைய மனம் இப்படியான சந்தர்ப்பங்களில் ஏதாவது சில காரணங்களை கற்பித்து கொண்டு சமாதானம் அடையுமாம்.

பரீட்சையில் பாஸாகாத மாணவர்கள் ஆசிரியர்களை குறை சொல்வது கூட இப்படித்தானாம். இதை 'மனிதனின் தற்காப்பு சாதனங்கள்' என்று சொல்கிறார்கள். பிஸியாக இருப்பதாக காட்டிக் கொள்வதும் அப்படிப்பட்ட ஒருவகை பரபரப்புதானாம்.

ஒருவருக்கு அவருடைய பதவியில் உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இப்படி பரபரப்பாக இருப்பதாக நடித்துக் கொண்டு அதை அடைந்ததாக திருப்திப்பட்டுக் கொள்வார்.

இப்படிப்பட்டவர்களெல்லாம் மனநல மருத்துவர்களிடம் போய் விஷயத்தைச்சொல்லி ஆரம்பத்திலேயே குணப்படுத்துவது நல்லது.

இனிமேல் யாராவது உங்களிடம் நான் 24 மணி நேரமும் பிஸி என்று சொன்னால் அல்லது எப்பொழுதும் பிஸியாக இருப்பது போல் நடித்தார்களானால் அவர்களை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

சரி... இந்த நிலைமையை தவிர்ப்பது எப்படி?

ஒருவரை எந்த நாற்காலியில்– (பதவியில்) கொண்டு போய் உட்கார வைத்தாலும்அந்த நாற்காலிக்குப் பொருத்தமாக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். வேலையைக் கற்றுக் கொள்ள வேண்டும். பதவிக்குரிய வேலை நன்றாக பழக்கப்பட்டு விட்டால் இந்த போலித்தனமான நடிப்புக்கு அவசியமில்லாமல் போய்விடும்.

ஒரு நாள் காலை 10 மணி...

எப்பொழுதும் பிஸியாக இருப்பதாக சொல்லிக் கொள்ளும் அலுவலர் ஒருவர் அலுவலகத்தை விட்டு அவசரமாக வெளியில் ஓடிவந்து கொண்டிருந்தார்.

"என்ன சேர்... இது... எல்லோரும் அலுவலகத்துக்கு வரும் நேரம் இது... நீங்கள் அவசரமாக வெளியில் ஓடி வருகிறீர்களே'' என்றேன்.

''தினமும் கையோடு கொண்டு வரும் முக்கியமான விடயத்தை இன்றைக்கு வீட்டிலேயே விட்டுட்டு வந்து விட்டேன் அதுதான் நான் அவசரமாக போகிறேன்'' என்றார்.

"அதற்கு ஏன் இப்படி ஓடவேண்டும்? பேசாமல் உங்களுடைய ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு போக வேண்டியது தானே!'' என்றேன்.

"நான் வீட்டில் விட்டுட்டு வந்ததே என்னுடைய ஸ்கூட்டர் தானே சேர்... அதை எடுத்துக் கொண்டு வரத்தான் ஓடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடி மறைந்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நலன்புரி நிலையங்களிலுள்ள பல்கலை. மாணவர்களுக்கு பொருளாதார நிவாரணங்கள் வழங்க மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர் களின் கல்வி நடவடிக்கைகளை சீராக மேற்கொள்வதற்கான பொருளாதார நிவாரணங்களை வழங்குவதற்கு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள் ளது.

இதற்கான விசேட செயற்திட்டமொன்றை தயாரித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பெற்றோரை இழந்த அல்லது தாய் தந்தை ஆகியோரில் ஒருவரை இழந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த நிதியுதவியை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய மாணவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ள தாகவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழக கல்வியை தொடங்குவதற்கான சந்தர்ப்பத்தை எற்படுத்தும் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

மகாபொல புலமைப்பரிசிலுக்கு மேலதிகமாக இந்த நிதியுதவி வழங்கவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இடம்பெயர் மாணவர்களை பயிற்றுவிக்க திட்டம்

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு க.பொ.த. உயர்தரப்பரீட்சையை நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.


கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பணிப்புரைக்கமைய இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி கொழும்பிலிருந்து றோயல் கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி போன்ற உயர் கல்லூரிகளிலிருந்து தேர்ச்சியுள்ள ஆசிரியர்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டு பரீட்சைக்கு மாணவர்க ளைத் தயார்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதேவேளை கல்வி அமைச்சரின் பணிப்புரைக்கு இணங்க பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தலைமையிலான குழு அடுத்த வாரம் வவுனியாவுக்குச் செல்லவுள்ளது.

இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மாணவர்களுக்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவது தொடர்பில் முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தலைமையில் இக்குழு செல்கிறது.

தரம் 5 புலமைப்பரீட்சை ஆகஸ்ட் மாத நடுப்பகுதிகளில் நடத்தப்படவுள்ளதால் அப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைச் சந்தித்தல் உட்பட அதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக மேற்படி குழுவினர் வவுனியாவிற்குச் செல்லவுள்ளனர். (6)




சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சரின் வன்னி மக்கள் துயர் துடைப்புச் செயற்பாட்டுக் குழுவினர் உள்ளூர் மற்றும் புலம்பெயர் மக்களிடம் சேகரிக்கப்பட்ட பொருட்களை வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இதன் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பால்மா வகைகளை செயற்பாட்டுக் குழுவின் உப தலைவர் தேவேந்திரன் மற்றும் ஊடக இணைப்பாளர் இ.சதீஸ் ஆகியோர் நலன்புரி நிலையத்தில் கடமையாற்றும் கிராம அலுவலகரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

17.06.2009

(ஆனி 3 , புதன்கிழமை)

நவமி முற்பகல் 11.38மணிவரை

ரேவதி பின்னிரவு 5.38மணிவரை

இராகுகாலம் 11.53-1.23மணிவரை

சுபநேரம் 4.23-5.53மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை சயனசுகக் குறைவு. |
| இடபம் | குடும்ப மகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், போசன சுகம். |
| மிதுனம் | நண்பரின் உதவி, அதிக பிரயாசை, தூரதேச செய்தி முயற்சி கைகூடும். |
| கடகம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு வீண் பயம். |
| சிங்கம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசன சுகம், பணக்குறைவு. |
| கன்னி | அபூர்வ சந்திப்பு, நல்ல வரவேற்பு, பிரயாண நன்மை, எடுத்த காரியம் கைகூடும். |
| துலாம் | காரியசித்தி, செய்தொழில் விருத்தி, பணவருவாய், திடீர் பயணம். |
| விருச்சிகம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், கௌரவக்குறைவு, உறவினர் சந்திப்பு. |
| தனுசு | கல்வியில் ஆர்வம், ரோகநிலை, நல்ல முயற்சி, சுபசெலவு. |
| மகரம் | சகோதரர் வழி நன்மை, தனவருவாய், பிரயாண சுகம், தொழில் விருத்தி. |
| கும்பம் | கடின வார்த்தை, வேலைச் சுமை, அமைதிக் குறைவு, தனவிரயம். |
| மீனம் | கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, நல்ல செய்தி. |


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | -- | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 80 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 70 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 20 |
| புடோல் | 30 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50-70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 70 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 35 | 40 | 80 |
| கரணைக் கிழங்கு | 70 | 90 | -- |
| பயிற்றங்காய் | 70 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 60 |
| கறிமிளகாய் | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | [illegible] | 15 | 10 |
| தேசிக்காய் | 140 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் தொடர்


# சஜீகன், மதுஷன், கௌசிகன் அசத்தல்; யாழ். இந்து 307 ஓட்டங்களால் வெற்றி



சஜீகன்



மதுஷன்



கௌசிகன்

(யாழ்ப்பாணம்)

சஜீகன், மதுஷனின் அதிரடியான துடுப் பாட்டத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி 307 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஸ்ரீலங்க கிரிக்கெட்டின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் 15 வயதிற்குட்பட்டோருக்கான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சஜீகன், மதுஷனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 374 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் சஜீகன் 70 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 95 ஓட்டங்களையும் மதுஷன் 76 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 74 ஓட்டங்களையும், ஜஸ்மினன் 48 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 53 ஓட்டங்களையும் கல்சேராவன் 46 புந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் கிருஷிகேசன் 3 விக்கெட்டுக் களையும் கஜேந்திரன் 2 விக்கெட்டுக்களையும் மாதுலன், நிதுஷாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 375 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத 67 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 307 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மாதுலன் 12 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார். உதிரிகளாக யாழ். இந்துக் கல்லூரி அணி 27 ஓட்டங்களை வழங்கியது.

பந்து வீச்சில் கௌசிகன் 9 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 23 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக்களையும் ஜாஸ்மினன் 3 விக்கெட்டுக்களையும், சஜீவன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்த யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்த யுவதி நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் மண்டைதீவைச் சேர்ந்த க.மரியலெயோனா (வயது 19) என்ற யுவதியே மரணமடைந்துள்ளார்.

பிரஸ்தாப பெண் கடந்த ஞாயிற்றுக் கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு வரும்வேளை மண்டைதீவு றேடியோ சிலோன் வீதியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறுதலாக விழுந்து தலையில் படுகாயடைந்தார்.

இந் நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக் கப்பட்ட அவர், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று மரணம் அடைந்துள்ளார். (ச-7)

## தொழிற்பயிற்சி ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் கியூடெக்-கரித்தாஸ் அனுசரணையுடன் நடத்தும் தொழிற்பயிற்சி ஆரம்ப விழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை விதாதா வள நிலையத்தில் தெல்லிப்பழை பிரதேசசெயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கியூடெக்-கரித்தாஸ் நிறுவன. இயக்குநர் அருட் திருசி.ஜெ.ஜெயக்குமார் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை உதவிப்பிரதேச செயலர் சி.சத்தியசீலன், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ர.நகுலேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)




வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறையினரால் யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தினை அறிமுகப்படுத்திய Dr. W. R. HOLMS ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மத்திய க்ல்லூரி, இரண்டாமிடம் பெற்ற யாழ். புனித பரி யோவான் கல்லூரி ஆகிய அணிகளின் வீரர்களைபடங்களில்காணலாம். (படங்கள்-கோபி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### கருவேல்

Botanical Name - Acacia arabica
Family - Leguminosae
Engl - Indian gum arabic tree
Sing - Babbula

5 மீற்றர் உயரம் வரை வளரும். நடுத்தர அளவுடைய மரம்; கிளைகள் நுனியில் பரந்து காணப்படும்; இறகு போன்ற தழை கொண்டது; பட்டை கறுப்பு; வெடிப்புற்றது அல்லது நீள்வாக்கில் பிளவுற்றது; தண்டின் வெறிப்புறக்கட்டை வெண்மையானது; மிருதுவானது; உட்கட்டை வயிரம் கொண்டது, இளஞ்சிவப்பு நிறம் கொண்டவை; இலைகள் இறகு வடிவ கூட்டிலை; இலைக்காம்பு இருமுறை கிளைத்தது, (Bipinnate) இலையடிச் செதில் முட்களாலானது. மலர்கள் நீண்ட மஞ்சரிக் காம்பில் கோள வடிவ தலை மஞ்சரியாக அமைந்தவை. இலைக் கோணத்தில் 2-5 தலைமஞ்சரிகள் உள்ளன. மணம் கொண்டவை; பொன்நிறத்தின; கனிகள் தட்டையானவை; வெண்மை நிறங் கொண்டது; 8-12 விதைகள்; கோடையில் மலரும்; பனிகாலத்தில் கனிகள் தோன்றுகின்றன. இதன் சிறு கிளைகளில் இரு பக்கங்களிலும் கூரிய முட்களைக் கொண்டதாகவும் காணப்படும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

யாழ் மாவட்டத்தில் குடத்தனைப் பகுதியிலும், நாயன்மார் கட்டுப் பிரதேசத்திலும் இம்மரம் காணப்படுகின்றது. இம் மரமானது வட ஆபிரிக்காவைச் சேர்ந்ததாக இருப்பினும், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் வெப்பமான பகுதிகளிலும் காணப்படுகின்றது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

◆ ஆலும் வேலும் பல்லுக்குறுதி எனும் பழமொழிக்கமைய கருவேலன் குச்சியினால் பல் துலக்கி வந்தால் பற்கள் நன்றாக உறுதிப்படும்.

◆ கருவேலன் மரத்தின் கொழுந்து இலைகளைச் சேகரித்து நன்றாக கசக்கி பிழிந்து சாறு எடுத்து அச்சாற்றிற்கு சமபங்கு நீர்கலந்து இளம் தீயில் காய்ச்சவும். ஓரளவு சுண்டியதும் இறக்குவதற்கு முன்பு 1 கரண்டி



சீனி சேர்த்து ஒரு கொதிவிட்டு இறக்கிவிடவும். இதை காலை, மாலை வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் இருமல் தணியும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயிற்கும் சிறந்தது. சிறுநீர் எரிச்சல் தணியும்.

◆ கருவேலன் கொழுந்தை சுத்தம் செய்து, நன்றாக அரைத்து காய்ச்சிய பசும் பாலுடன் கலந்து சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

◆ இதன் கொழுந்தை அரைத்து, உடலில் ஏற்படும் கட்டிகளின் மேல் பற்றுப் போட்டு வந்தால், அக்கட்டிகள் சீக்கிரத்தில் பழுத்துடையும்.

◆ கருவேலன் மரத்தின் பட்டைகளை சேகரித்து, குடிநீர் காய்ச்சி வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்புண், ஈறுகளில் ஏற்படும் வீக்கம் தணியும்.

◆ இக்குடிநீரை பாலுடன் கலந்து சாப்பிட்டால் பேதியை நிறுத்தும். அதிக சிறுநீர் வெளியேறுதலைச் சீராக்கும்.

◆ நெருப்பில் வெந்துபோன புண்கள் சீக்கிரம் ஆறாவிட்டால் இக் கருவேல மரத்தின் பிசின் தூளுடன் முட்டை வெண்கருவைக் கலந்து பூசினால் சீக்கிரத்தில் குணமாகும்.

◆ கருவேலன் பிசினை சிறு துண்டுகளாக்கி நெய்யில் வதக்கி உட்கொண்டு வந்தால் ஆண்மை பெருகும். வீரியம் விருத்தியடையும்.

◆ கருவேலன் பட்டைகளை தூளாக்கி நல்லெண்ணெயில் காய்ச்சி தீப்புண்களுக்கு இட தீப்புண்கள் விரைவில் ஆறிவிடும்.

◆ கருவேலன் பிசினை நன்றாக சுத்தம் செய்து பச்சையாகவே ஒரு சிறுதுண்டு வாயில் அடக்கி வைத்துக் கொண்டு சிறிது சிறிதாக உமிழ்நீரை விழுங்கி வந்தால் உடலில் பலம் ஏற்படுவதோடு உடற்சூடும் தணியும் மேனி பளபளப்படையும். இன்னும் சில கிராம மக்கள் பயன்படுத்தி பயன் பெறுகிறார்கள்.

◆ கருவேல மரத்தின் முற்றிய பட்டைகளை சேகரித்து பொடித்து, அரித்து வைத்துக் கொண்டு பல்துலக்கி வர பற்கள் வெண்மையாக பளிச்சிடும். பல் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்தது. கருவேல மரத்தில் பட்டைகளைச் சேகரிக்க முடியாதவர்கள் தமிழ் மருந்துக் கடைகளில் பட்டைகளை வாங்கி நன்றாக கழுவி காயவைத்து பொடித்து பற்பொடியாக பயன்படுத்தி பயன்பெறலாம்.

◆ கருவேலன் பிசினை நன்றாக உலர வைத்து பின்பு அதனை துண்டுகளாக பசும் நெய்யில் வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு எடுத்த பிசினை நன்றாக தூள் செய்து வைத்துக் கொண்டு ஒரு சிட்டிகையளவு காலை, மாலை உட்கொண்டு வந்தால் ஆண்மையும், தாது விருத்தியும் உண்டாகும்.

◆ கருவேல மரத்தின் பிஞ்சுக்காய்களை இடித்து வரும் சாற்றை பனங்கட்டி அல்லது தேனுடன் கலந்து அருந்த பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு தீரும். அத்துடன் இரத்த விருத்தியையும் ஏற்படுத்தும்.

◆ கருவேல மரத்தின் வேரைக் குடிநீர் காய்ச்சி கருவேல மரத்தின் பிஞ்சையும் பூவையும் நன்றாக இடித்து இக் குடிநீருடன் கலந்து உண்டு வந்தால் நோய்கள் உடலில் அணுகாது இருப்பதுடன், இரத்த விருத்தியையும் ஏற்படுத்தும்.

◆ கருவேல மரத்தின் பிசினை உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீருடன் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.


டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ கருவேலன் கொழுந்தைக் கொண்டு வந்து இலைகளை மட்டும் ஆய்ந்து பாதியளவு சீரகத்தையும் சேர்த்து மைபோல அரைத்து உளுந்து வடை போல தட்டி நடு நில் துளை செய்து வலியுள்ள கண்ணை மூடச் செய்து அதன்மேல் வைத்து வெற்றிலையின் மேல் வைத்து சுத்தமான துணியால் கட்டி விட வேண்டும். இரவில் கட்டி காலையில் அவிழ்த்து விட வேண்டும். 3 நாட்கள் செய்ய கண்வலி குணமாகும். ●●●

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

78



மேலும் தாங்கள் வயோதிபத்தை நெருங்க நெருங்க தங்களுக்கு என்று ஒரு கூட்டம் - ஒரு சமுதாயம் ஊன்று கோலாக பயன்படும் என்ற நம்பிக்கையை தேவாலயம் அவர்களுக்கு அளித்தது. ஆன்மிக நிறுவனங்களை நடத்துகிறவர்கள், தங்கள் சுயநலத்தை முன்னிறுத்தி அவற்றை அரசியலாக்க முனைகிறார்கள்.

வெளிப்படைத்தன்மையற்று, வேவு பார்த்தல், யார் யாருக்கு பணிகளில் பங்கு அளிப்பது போன்ற பக்கசார்பு விடயங்கள் இன்று மலிந்து கிடக்கிறது.

புறம் பேசுதல், குடும்ப ஆட்சி, வயோதிபர்களை அவமதித்தல், ஆன்மிகம் என்பது வெறும் பூசையும் புனஸ்காரம் என்ற மட்டத்துக்குள் அடக்கி விட்டு இளைஞர்களை இன்னுமொரு புதிய அடிமைத் தனத்துக்குள் அடைத்து வைப்பது போன்ற செயல்களிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணினார்கள்.

இவர்கள் யேசு கிறிஸ்துவை நோக்கித் தான் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. உண்மையில் திரித்துவ தேவாலயம் ஆபிரிக்கர்களின் கனவை பிரதிபலிக்கும் வண்ணம் அமைந்து அவர்களின் வரலாற்றை நிலை நிறுத்தி விழுமியங்களின் விநியோக நிலையங்களாகவும் கருத்துக் களின் கருவறையாகவும் விளங்கியது. வித்தியாசம் இன்றைய நிலையில் இருக்கத்தான் செய்தது.

அன்று இந்த விநியோகம் - பள்ளி ஆசிரியர்கள், வைத்தியர்கள் என்று பெரியவர்களின் வாயி லாக கிறிஸ்தவக் கடமையாக பாபப்பட்ட மக் களை நோக்கி வெள்ளமாக ஒரு பாதையில் சென்றது. இன்றோ இந்த கலாசாரப் பரிமாற்றம் பின்னாலிருந்து முன்னால் பாய்ந்தது.

இதற்கு வழி வகுத்தது தான் திருத்துவ தேவாலயம். அது தனது கதவுகளை அகலத் திறந்து விட்டது. எல்லோரும் வகுப்பு பேதம் இன்றி உள்ளே வரலாம். அவர்களின் விதி தன்னோடு தான் பிணிக்கப்பட்டுள்ளது என்ற உத்தரவாதத்தை அவர்களுக்கு அளித்தது. ஆகவே தான் அவர்கள் 'நாங்கள், நீங்கள், அவர்கள் வேறு' என்ற எண்ணங்களை, பேதங்களை எல்லாவற்றையும் கைவிட்டு 'நாம் நமக்கே - எல்லாம் நாங்களே' என்ற அறிவுபூர்வமான உணர்வைப் பெற முடிந்தது.

ஒபாமாவுக்கு இது ஒரு புதிய அனுபவம். தனது அமைப்பிலிருந்து வேறுபட்டு தேசியம் என்ற வாய்ப்பாட்டிலும் பார்க்க நிரந்தரமுடையதுமான இந்த கலாசார சமுதாயம் உண்மையில் சக்திவாய்ந்த திட்டம் என்பதை ஒபாமா கண்டுகொண்டார்.

அவருக்கு இன்னுமொரு விடை காண முடியாத வினாக்கள் எழத்தான் செய்தன. தேவாலயத்தின் மூலம் கறுப்பின மக்களை நகரத்தை விட்டகலாது தடுக்க முடியுமா? இளைஞர்கள் குற்றவாளிகளாகி சிறைத் தண்டனை அனுபவிப்பதை நிறுத்த முடியுமா? கறுப்பர்கள் படிக்கும் பள்ளியின் நிர்வாகத்தில் மாற்றம் கொண்டு வரமுடியுமா? அரச பள்ளிகளில் கொண்டு வர இருக்கும் சீர்திருத்தம் பற்றிய விடயத்தில் வண. போதகர் றைற் துணிவுடன் தன் பங்களிப்புகளை ஆற்ற முடியுமா? றைற் போன்ற மனிதர்கள் உறுதியான முடிபுகள் எடுக்கத் தவறும் பட்சத்தில் சமுதாயக் கட்டமைப்பின் பாரிய உருவத்தை உடையாது பேணுவது எப்படி? என்பவைதான் ஒபாமாவை வாட்டிய பிரச்சினைகளாகும்.

இதே வினாக்களை ஒபாமாதான் சந்தித்த பலரிடம் கேட்ட போது அவர்கள் வேடிக்கையாக சிரித்தனர். அவர்களைப் பொறுத்தவரை திருத்துவ தேவாலய கையேட்டில் காணப்பட்ட வாசகங்களில் அசையாத நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். ஒபாமாவையும் திருத்துவ தேவாலய அங்கத்தவராக வந்து சேரும்படி வேண்டினர்.

இந்தக் காலத்தில்தான் ஹரோல்ட்டு வோஷிங்டன் இறந்தார். "அவர் இரண்டாவது தடவையாக மேயராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். தனது எதிரிகளைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் அடுத்த இருபது வருடங்களில் தான் மேயராக இருப்பேன் என்று நம்பினார்.

ஆனால் விதிவிளையாடியது. அவரின் எடையைத் தாங்க முடியாமல் இதயம் அவரைக் கைவிட்டது.

சிக்காகோ நகரம் எங்கும் வெறிச் சோடிக் கிடந்தது. வீடுகளின் உள்ளே மக்கள் அழுது கொண்டிருந்தார்கள். கறுப்பர்களின் வானொலி ஹரோல்டின் பேச்சுக்களை மீண்டும் மீண்டும் ஒலிப்பரப்பிக் கொண்டிருந்தன. இறந்தவர் மீண்டும் உயிர்பெற்றெழுவார் போன்ற நம்பிக்கையை அது கொடுத்தது எனலாம்.

நகர மண்டபத்தில் அவர் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கறுப்பரும் அதிர்ச்சியால் உறைந்து போய் செய்வது அறியாது தடுமாறினர்.

எதிர் காலம் அவர்களுக்கு இருண்டு விட்டதாகவே எண்ணினர்.

வாஷிங்டனின் ஆதரவாளர்கள் அவரின் இறுதிச் சடங்கு முடிந்ததும் ஒருவாறு அதிர்ச்சியிலிருந்து மீண்டனர். ஒன்று கூடி னர். புதுக் குழுக்களாகப் பிரிந்தனர். புதிய உபாயத்தைக் கைக்கொண்டு அடுத்த தலை வரைத் தேர்ந்தெடுக்க முயற்சியை ஆரம்பித்தனர்.

ஆனால் எல்லாம் காலம் கடந்து விட்டது. அவர் விட்ட இடத்திலிருந்து தொடர எந்தவொரு அரசியல் அமைப்பும் இருக்க வில்லை கொள்கைகளும்இல்லை. சூரியன் தன் கிரகணங்களைப் பாய்ச்சுவது போல முழுக் கறுப்பு அரசியலும் அவரிடமிருந்து தான் தெறித்தது. இன்று அவர் போய்விட்டார். அவர் வாழ்ந்த இலட்சியம் மறுக்கப்பட்டு மறக்கவும் பட்டது.

ஆதரவாளர்கள் கலகம் செய்தனர். பிரிவினைகள் ஏற்பட்டன. வதந்திகள் மலிந் தன. மறைந்த தலைவருக்குப் பதிலாக வாரிசு ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கூட்டுக் கட்சிகள் (ஹரோல்ட் உருவாக்கியது) மறைந்துவிட்டன. கறுப்பின நகரபிதாக்கள் இரகசியமாக வெள்ளைக்காரர்களோடு சேர்ந்து லஞ்சம் பெற்றனர். துரோகிகள் கறுப்பினத்தவர்களை விற்று விட்டார்கள் என்று கூச்சலும் கூக்குரலும் எழுந்தன.

ஆனால் அதிகார சக்தி பொறுமை காத்தது. அதற்கு வேண்டியது எது என்றும் அதை

**ஜம்பொன்**

அடைவது எப்படி என்றும் தெரியும். நடுநிசி வாக்கு கள் எடுக்கும் நேரம் வந்துவிட்டது. கதவு திறந்ததும் கறுப்பர் ஒருவரும் வெள்ளையரும் உள்ளே நுழைந்தனர்.

கறுப்பர் முன்னர் ஹரோல்ட்டின் ஆதரவாளர். இருவரும் ஆளையாள் பார்த்துச் சிரித்தனர். நிகழப் போகும் அராஜகம் அவர்களுக்கு நன்கு வெளிச்சம். வெள்ளையர் மேயராகினார்.

கறுப்பர்கள் விலைபோயினர் ஹரோல்டின் உருவம் பதித்த கடதாசி ஒன்று பறந்து வந்து ஒபாமாவைத் தாண்டியது.

(தொடரும்)

# படையினரிடம் சரணடைந்த 9,728 பேர்

## வவுனியாவிலுள்ள நான்கு முகாம்களில்

## பிரதி பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலை யில் அவ்வியக்கத்திலிருந்து தப்பி வந்து படையினரிடம் சரணடைந்த 9 ஆயிரத்து 728 விடுதலைப் புலி உறுப்பினர்களும் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நான்கு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று வட மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் லெவ்கே தெரிவித்தார்.

ஆயிரத்து 700 பெண்கள் உள்ளடங்கலாக சரணடைந்துள்ள இவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை - அவர்களில் பலர் இது வரையில் சிங்களவர்களைக் கண்டது கூட இல்லை என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்வர்கள் உட்பட 9 ஆயிரத்து 728 உறுப்பினர்கள் இதுவரையில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

இவர்களில் சுமார் 2 ஆயிரம் பேருடன் கடந்த சனிக்கிழமை வவுனியா நெலுக்குளம் தொ ழில்நுட்ப நிறுவனத்தில் வைத்து விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன் போது ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் மூலம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

தெற்கில் வாழும் தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் இணைந்து ஒற்றுமை யானதொரு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர்களுக்கு உதாரணங்களுடன் எடுத்துக் கூறினேன்.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கைக் கொண்டு நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளில் அவர்களின் ஒத்துழைப்புக்களை முழுமையாக வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தேன் என்றார். (6)

## தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கான போட்டி

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக் கான போட்டிக்கு சிறுகதை, கவிதை, குறும்படப் பிரதியாக்கம், கட்டுரை போன்ற ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் இப்போட்டிக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவர்கள் அந்தந்த பிரதேச செயலாளருடன் கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பண்பாட்டலுவல்கள் உதவிப்பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கேட்டுக்கொள்கின்றார். (6-4)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு விசேட வாக்குச் சாவடிகள்

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்.மாநகரசபை, வவுனியா நகர சபைகளுக்கான தேர்தலின் போது இடம் பெயர்ந்த மக்களுக்காக விசேட வாக்குச் சாவடிகளை நிறுவுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடைவதுடன் இது தொடர்பில் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் தங்கியிருக்கின்றவர்களை கவனத்தில் கொண்டு இடம்பெயர்ந்தவர்களுக்கென விசேட வாக்குச்சாவடிகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் புத்தளம், அநுராதபுரம், கொழும்பு, குருணாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர் என்றும் தேர்தல்கள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (6)

# இராணுவ லெப்டினன்ட், பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் ஹபரணையில் கைது

(கொழும்பு)

வன்னியிலிருந்து களவாடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வான் ஒன்றுடன் இராணுவத்தின் லெப்டினனட் பதவியிலுள்ள அதிகாரி மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பொலனறுவை ஹபரணை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் வசமிருந்த வானானது, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அடையாளங்களுடன் காணப்பட்டுள்ளதுடன் அதற்குள் இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளொன்று உட்பட மேலும் சில உபகரணங்கள் காணப்பட்டதாக ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் கூறியதாவது,

கடந்த சில தினங்களுக்கு முன்பே அநுராதபுரம் கெப்பிற்றிகொல்லாவ பகுதிக்கு உபகரணங்களுடன் கொண்டு வரப்பட்டுள்ள மேற்படி வானானது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அங்கிருந்து ஹசலக பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்படும் போது ஹபரணை ஈரிஒயா பகுதியில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.


இதன் போது குறித்த வானைப் பரிசோதித்த பொலிஸார் அதற்குள்ளிருந்து ரீ-56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கான துப்பாக்கி ரவைகள் - 30, லப்டொப் ரக கணனி - 01 மற்றும் ஜீ.பி.எஸ் ரக தகவல் பரிமாற்றம் கருவி ஒன்று போன்ற உபகரணங்களையும் கைப்பற்றினர்.

என்.சி. ஜே.கே. 9559 எனும் இலக்கத் தகட்டை குறித்த வானுக்கு தற்காலிகமாகப் பொருத்தியுள்ள சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஹபரணை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேற்படி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த விசேட பொலிஸ் குழுவொன்று தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றது. (6)

# இலங்கையில் தற்காலிக முகாம்கள் நிரந்தர முகாம்களாக மாற்றப்படக்கூடாது

## நோர்வே தெரிவிப்பு



(கொழும்பு)

வவுனியாவில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு தமது நாடு உதவியளிக்குமாக இருந்தால் அது மனிதாபிமான அடிப்படையிலேயே அமையும் என நோர்வே தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த நோர்வேயின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜொனாஸ் கார் ஸ்டோர் இதனை தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள 3 இலட்சம் மக்கள், மீள் குடியமர்த்தப்படுவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது நாட்டை பொறுத்த வரையில் முகாம்களை விஸ்தரிப்பதற்கு உதவியளிப்பதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் உடனடியாக மீள் குடியமர்த்தப்படாவிட்டால் தமது பழைய அனுபவங்களின் படி தற்காலிக முகாம்கள் நிரந்தர முகாம்களாக மாறும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்த நோர்வேயின் வெளியுறவுத் துறை அமைச்சர், அதற்கு இலங்கையில் இடமளிக்கப்படக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார். (6)

# டெங்கு, எலிக்காய்ச்சலினால் 184 பேர் பலி; 11,142 பேர் பாதிப்பு

## சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தகவல்

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலினால் இதுவரைக்கும் 134 பேரும், எலிக்காய்ச்சலினால் 50 பேருமாக மொத்தமாக 184 பேர் மரணமடைந்துள்ளனர்.

இருவகையான காய்ச்சல்களினாலும் 11ஆயிரத்து 142 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு அறிவித்துள்ளது.

டெங்கு காய்ச்சலினால் 9ஆயிரத்து 652 பேரும், எலிக்காய்ச்சலினால் ஆயிரத்து 490 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு நுளம்பு மற்றும் எலிக் காய்ச்சல் பரவுவதை தடுப்பது தொடர்பில் பொதுமக்கள் கூடுதலாக அக்கறை காட்ட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பபா பலிகவர்தன தெரிவிக்கையில்,

டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் போன்றவற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

டெங்கு, எலிக்காய்ச்சல்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு சுகாதார அமைச்சிற்கு உண்டு. அதற்கு பொதுமக்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

சுகாதார அமைச்சினால் சகல மட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் திட்டங்களை பொதுமக்கள் பின்பற்றினால் இவ்வாறான நோய்த் தொற்றுக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

தொற்று நோய்களில் இருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ள சுகாதார அமைச்சு பல்வேறு வேலைத் திட்டங்களை செய்து வருகின்றது.

அதனை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும். குறிப்பாக ஒவ்வொருவரும் தத்தமது வீட்டுச் சூழலை 5 நாட்களுக்கு ஒரு தடவையாவது சுத்தப்படுத்த வேண்டும்.

அதே போன்று பாடசாலைகள், கம்பனிகள் என சகல இடங்களிலும் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலமே தொற்று நோய்களில் இருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். (6)

# முகாம்களில் வயோதிபர்கள் உயிரிழப்பதாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது

(கொழும்பு)


இடைத்தங்கல் முகாம்களில் வயோதிபர்கள் உயிரிழப்பதாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

எனினும், அது ஒன்றும் வழமைக்கு மாறான செயல் அல்ல எனவும் இயற்கையான வகையில் வயோதிபர்கள் உயிரிழப்பதாகவும் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் லயனர் பிறேம சிறி தெரிவித்துள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களில் ஏறத்தாழ 2 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களும் சிறுவர்களுமே. இந்நிலையில் இயற்கை மரணம் என்பது தவிர்க்க முடியாதது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு 13.06.2009

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி









# றோயல் கல்லூரி, கொழும்பு -7

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை –2009

## வழிகாட்டல் பரீட்சை

இரசாயனவியல்-1 Chemistry-1

வினா 41 இல் இருந்து 50 இற்கான அறிவுறுத்தல்கள் (தொடர்ச்சி)

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (a) யும் (b)யும் மாத்திரம் திருத்தமானவை | (b) யும்(c)யும் மாத்திரம் திருத்த மானவை | (c) யும்(d)யும் மாத்திரம் திருத் தமானவை | (d) யும் (a)யும் மாத் திரம் திருத் தமானவை | வேறு தெரிவுகளில் எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவை |

41. $N_2(g)$ உம் $O_2(g)$ உம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?
(a) $N_2(g)$ மூலக்கூறு $O_2(g)$ மூலக்கூறிலும் உறுதி கூடியது.
(b) $N_2(g)$ இன் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை $O_2(g)$ இன் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறையிலும் உயர்வானது.
(c) $N_2(g)$ உம் $O_2(g)$ உம் இலகுவில் தாக்கம் புரிந்து $NO(g)$ ஐக் கொடுக்கும்.
(d) வளியில் உள்ள பக்டீரியாக்களினால் $N_2(g)$ ஆனது $NO_3$ அயனாகத் தாழ்த்தப்படும்.

42. பின்வரும் தாக்கங்களில் எது/ எவை புறவெப்பத்தாக்கம் அல்லாதது/ அல்லாதவை?
a) $1/2\ I_2(s) \longrightarrow I(g)$ (b) $O(g) \longrightarrow O^-(g)$
c) $Fe^{2+}(g) \longrightarrow Fe^{3+}(g)$ (d) $S^-(g) \longrightarrow S^{2-}(g)$

43. குறிப்பிட்ட மூலகமொன்றின் மின்னெதிர்த்தன்மை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியானவை?
a) மின்னெதிர்த்தன்மை அணுப்பருமனில் தங்கியுள்ளது.
b) பிணைப்பு ஒன்றின் அயன். இயல்பில் மின்னெதிர்த்தன்மை வித்தியாசம் உயர்ந்த பாதிப்பை கொண்டிருக்கும்.
c) மூலக அணு ஒன்றின் மின்னெதிர்த்தன்மை ஒட்சியேற்ற எண்ணுடன் வேறுபடும்
(d) மூலகத்தின் ஒட்சியேற்ற நிலை பூச்சியமாகும்போது மின்னெதிர்த்தன்மை யும் பூச்சியமாகும்.


44. பின்வரும் சேர்வைகளில் Sp கலப்பு $Sp^2$ கலப்பு இரண்டையும் கொண்ட காபன் அணுக்களை உடைய சேர்வை சேர்வைகள்?
(a) $CH_2=CH-CH_2-C\equiv CH$ (b) $C_6H_5CH=CH_2$
(c) $CH_2=CH-C\equiv CH$ (d) $C_6H_5C\equiv CH$

45. பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை
a) $CH_3CONH_2$ ஐப் போல $CH_3CH_2NH_2$ உம் கருநாடியாகச் செயற்படும்.
b) அறைவெப்ப நிலையில் $CH_3CH_2NH_2$ ஐப் போன்று $CH_3CONH_2$ உம் $HNO_2$ உடன் தாக்கம் புரியும்.
c) $CH_3CH_2NH_2$ இல் இருந்து $CH_3CONH_2$ இனை வேறுபடுத்துவதற்கு NaOH (aq) இனைப் பயன்படுத்த முடியாது.
b) $P_2O_5$ உடன் $CH_3CONH_2$ ஐப் போன்று $CH_3CH_2NH_2$ உம் தாக்கம் புரியும்.

46. உப அணுத்துணிக்கைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?
a) குறித்த அணுவொன்றில் இலத்திரன்களைப் போன்று நியூத்திரன்களும் அதன் உறுதித்தன்மையில் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும்.
d) அணுக்கருவில் புரோத்தன்கள்,நியூத்திரன்களுடன் வேறு உப அணுத் துணிக்கைகளும் இருக்க முடியும்.
c) இரசாயனத் தாக்கத்தில் அணுவில் உள்ள புரோத்தன்கள் இலத்திரன்களை விடவும் கூடிய அளவு ஆதிக்கம் செலுத்தும்.
d) இலத்திரன் அலை இயல்பை கொண்டிருக்கும் போது பெரும்பாலும் ஒளி யின் வேகத்திற்குச் சமனாகும்.

47. $2SO_2+O_2(g) \rightleftharpoons 2SO_3+(g)$
மேற்படி சமநிலை தொகுதியைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/சரியானவை?
a) தொகுதியில் $SO_2(g)$ இன் செறிவினை அதிகரிப்பதால் மட்டும் $SO_3(g)$ இன் விளைவை அதிகரிக்க முடியும்.
b) தொகுதிக்கு He(g) இனைச் சேர்ப்பதன் மூலம் தொகுதியின் மொத்த அமுக்கத்தைப் போல் $SO_3(g)$ இன் பகுதி அமுக்கத்தையும் அதிகரிக்க முடியும்.
c) தொகுதியின் மொத்த அமுக்கத்தை இரு மடங்காக்கும் போது $O_2(g)$ இன் பகுதியமுக்கம் இரு மடங்கிலும் கூடுதலாக அதிகரிக்கும்.
d) தொகுதியின் வெப்பநிலை அதிகரிக்கும் போது $SO_2(g)$ தோன்றும் வீதம் குறைவடையும்.

48. ஐதரசனின் காலல் நிறமாலை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது சரியானவை?
a) நிறமாலையில் சக்தி அதிகரிக்கும் போது தொடரில் உள்ள கோடுகளுக்கு இடையேயுள்ள இடைவெளி குறைவடையும்.
b) பாசன் தொடரில் உயர் சக்தியை உடைய கோடு ஐதரசனின் முதலாம் அயனாக்கற் சக்தி பற்றிய கருத்தைத் தரும்
c) அணுக்கருவில் இருந்து தூரம் அதிகரிக்கும் போது இரு சக்திப் படிப்புகளுக்கு இடையே உள்ள இடைவெளியும் அதிகரிக்கும்.
d) n= 3 இல் இருந்து n=1 இற்கு இலத்திரன் பாய்ச்சலின் போது வெளிவிடப் படும் சக்தியிற்கும் இடையேயான வித்தியாசம் n=2 இல் இருந்து n= 3இற் கான இலத்திரன் பாய்ச்சலின்போது வெளிவிடப்படும் சக்திக்கு சமனாகும்.

49. பின்வரும் சோடிகளில் எது / எவை பரிவுக்கட்டமைப்பு அல்லாதசோடிகள/ சோடிகள்?
(a) $^{14}CH_2=CH-\dot{C}H_2 \longleftrightarrow {}^{14}\overset{+}{C}H_2-CH=CH_2$
(b) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-NH_2 \longleftrightarrow CH_3-\overset{O^-}{\overset{|}{C}}=\overset{+}{N}H_2$


50. Mg உலோகம் பிரித்தெடுப்பிற்கு பயன்படுத்தப்படும் பதார்த்தம்/ பதார்த் தங்கள்
a. தொலமைற்று b. மக்கனற்றைற்று c. கல்சைற்று d. கானலைற்று

**51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத்தல்களுக்கான சுருக்கம்.**

| தெரிவுகள் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தருவது |
| 2 | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தராதது |
| 3 | உண்மை | பொய் |
| 4 | பொய் | உண்மை |
| 5 | பொய் | பொய் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 51 | கற்பனை அயன் சேர்வைகளின் உறுதியை விளக்குவதற்கு இவற்றின் தோன்றல் வெப்பவுள் ளுறை உதவியாக இருக்கும் | கற்பனை அயன் சேர்வைகளின் நியமத்தோன்றல் வெப்பவுள்ளுறை யைப் போன்று நியமச் சாலக வெப் பவுள்ளுறையும் புறவெப்பமாகும். |
| 52 | வெப்ப நிலை அதிகரிப்புடன் எல்லாப் புறவெப்பத்தாக்கங்களின தும் தாக்க வீதமும் அதிகரிக்கும். | வெப்பநிலை அதிகரிக்கும் போது தாக்கம் புரியும் துணிக்கைகளின் இயக்க சக்தியும் அதிகரிக்கும் |
| 53 | எல்லா நிபந்தனைகளிலும் மெய் வாயுக்களின் அமுக்கப்படு காரணி எப்பொழுதும் 1.00 இலும் பார்க்க குறைவான அல்லது உயா வான பெறுமானத்தைக் கொண்டி ருககும். | வெப்பநிலையைப் போன்று அமுக் கமும் மெய் வாயுக்களின் அமுக்க ப்படு காரணியில் உயர்ந்த ஆதிக் கத்தைச் செலுத்தும் |
| 54 | $SO_2(g)$ உம் $CL_2(g)$ உம் வெளிற் றும் கருவியாகச் செயற்படும் போது இவை ஒட்சியேற்றும் கருவிகளா கச் செயற்படும். | $SO_2(g)$ இன் வெளிற்றும் செயற் பாடு உலர் நிபந்தனையில் நடை பெறும் அதேவேளை $CL_2(g)$ இன் வெளிற்றும் செயற்பாடு ஈர நிபந் தனைகளில் நடைபெறும். |
| 55 | சமநிலையில் எப்பொழுதும் விளை வுகள் உருவாகும் வீதமும் தாக்கி கள் பயன்படுத்தப்படும் வீதமும் சமனாகக் காணப்படும். | மீளும் தாக்கமொன்றின் சம நிலை தொகுதியில் எப்பொழுதும் முற்தாக்க வீதமும் பிற்தாக்க வீதமும் சமனாகும். |
| 56 | மிக மெல்லிய பொற்தகட்டின் ஊடு துணிக்கைகள் பயணிக்கும் போது எல்லா துணிக்கைகளும் பொற் கட்டை ஊடறுத்துச் செல்லும். | உலோகத்தகட்டின் அணுக்க ளுக்கு இடையில் பெரிய வெற்று இடைவெளி காணப்படும். |
| 57 | $Ca(HCO_3)_2$ கரைசலுக்கு $NH_2$ சேர்க்கும் போது $CaCO_3$ வீழ்படிவு உருவாகும். | $HCO_3$ அயன்கள் அமிலமாகச் செயற்படும் |
| 58 | $NaHCO_3$ உடன் பினோல் $CO_2$ வாயு வைக் கொடுக்காது. ஆனால் பினோல் மென் அமிலமாகச் செயற் படும். | பினோல் ethonol chloride உடன் தாக்கம் புரிந்து எசுத்தா் ஒன்றைக் கொடுக்கும் |
| 59 | $Na^+$ அயனின் ஆரை பெரும்பாலும் Ne இன் அணுவாரைக்குச் சமன் | $Na^+$ அயன், Ne அணு ஆகிய இரண்டும் ஒரே இலத்திரன் நிலை யமைப்பைக் கொண்டிருக்கும். |
| 60 | $CaH_2$ இற்கும் $D_2O$ இற்கும் இடை யில் நடைபெறும் தாக்கத்தால் HD உருவாகும். | H ஐப் போன்று Dயும் அமில மாகச் செயற்படும் இன் Ne அணுவாரைக்குச் சமன் |

# றோயல் கல்லூரி, கொழும்பு -7

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை –2009
## வழிகாட்டல் பரீட்சை

இரசாயனவியல்-11 Chemistry-II

3 மணித்தியாலங்கள் Three hours

பகுதி A- அமைப்புக்கட்டுரை
எல்லா வினாக்களுக்கும் விடை தருக
அகிலவாயு மாறிலி $R=8.314\ Jk^{-1}\ mol^{-1}$
அவகாதரோ மாறிலி $N_A=6.022 \times 10^{23}\ mol^{-1}$

1.(a)A,B,C,D என்பன ஆவர்த்தன அட்டவணையில் மூன்றாம் ஆவர்த்தனத்தில் அடுத்துள்ள தாண்டலற்ற நான்கு மூலகங்களாகும். இந் நான்கு மூலகங்களினதும் முதலாம்,மூன்றாம் அயனாக்கற் சக்திப் பெறுமானங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மூலகம் | A | B | C | C |
|---|---|---|---|---|
| முதலாம் அயனாக்கற் சக்தி/$kJmol^{-1}$ | 1060 | 998 | 1258 | 1529 |
| மூன்றாம் அயனாக்கற் சக்தி /$kJmol^{-1}$ | 2921 | 3394 | 3850 | 3956 |

மூலகம் C வேறுபட்ட ஒட்சியேற்ற நிலைகளைக் காட்டும்.

i.இந்நான்கு மூலகங்களையும் அடையாளங் காண்க.


ii.Aயினதும் Bயினதும் முதலாம் அயனாக்கற் சக்தி வேறுபாட்டிற்கான காரணத்தை விளக்குக.

iii.இந் நான்கு மூலகங்களையும் அவற்றின் கொதிநிலை ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்துக.

.....................<......................<......................<...........................

iv. மேலே வினா (iii)இல் கொதி நிலை வேறுபாட்டிற்கு உரிய காரணத்தை விளக்குக.

b. Nitrosy chloride (NOCL) இனை அயன் சேர்வை ஒன்றாகக் கருதுக. இது nitrosyl ($NO^+$), chloride ($Cl^-$) அயன்களைக் கொண்டிருக்கும். கீழே தரப்பட்டபெட்டிகளினுள் $NO^+$கற்றயனின் இரண்டு பரிவுக்கட்டமைப்புகளை வரைக.



c. அமில ஊடகத்தில் $Bro^-$ அயன்கள் $OX_4^-$ அயன்களை $X_2On_3^{-11-}$ அயன்களாகத் தாழ்த்தும். இத்தாக்கத்தில் $BrO^-$ அயன்கள் $BrO^-$ அயன்களாக மாற்றப்படும். மேற்படி தாக்கத்தில் BrO- அயனுக்கும் $XO_4^{3-}$ அயனுக்கும் இடையேயான மூல்விகிதம் 2:5 ஆகும்.

i) $X_2O_3^{n-}$ அயனில் n இன் பெறுமானம் யாது?

ii) ஒட்சியேற்ற - தாழ்த்தல் அரைத் தாக்கங்களை குறித்து நிற்கும் சமன்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.

1.ஒட்சியேற்றம்

2.தாழ்த்தல்

d)$AsF_5^{2-}$, $IF_4^+$அயன்களைக் கருதுக. மைய அணுவைச் சூழவுள்ள இலத்திரன் சோடிகளின் எண்ணிக்கை, சோடி இலத்திரன்களின் ஒழுங்கு,அயனின் கேத்திர கணித வடிவம் என்பவற்றை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக.

| அயன் | $AsF_5^{2-}$ | $IF_4^+$ |
|---|---|---|
| மைய அணுவைச் சூழவுள்ள இலத்திரன் சோடிகளின் எண்ணிக்கை | | |
| இலத்திரன் சோடிகளின் ஒழுங்கு | | |
| அயனின் கேத்திரகணித வடிவம் | | |

02.a.திண்மக் கலவையொன்று $(NH_4)_2CO_3$, $MgCO_3$, $Na_3CO_3$ ஆகிய உப்புக்களைக் கொண்டுள்ளது. இக்கலவையின் 4.76g வெப்பப்பிரிகையினால் 2.92g மாறாத் திணிவுடைய விளைவு பெறப்பட்டது. இதன்போது வெளியேறிய நீராவியின் திணிவு 0.18g. உப்புக்கலவையில் உள்ள $(NH_4)_2CO_3$ : $MgCO_3$ : $Na_2CO_3$ மூல் விகிதத்தைக் காண்க.

Mh= 24, O=16, H=1, N=14, Na=23, C=12

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

b. உப்பொன்றில் காணப்படும் பின்வரும் ஒவ்வொரு அயன்களும் இருப்பதை நீர் எவ்வாறு தெளிவாகச் செய்து காட்டுவீர்?

1.$N^{3-}$

-----------------------------------------------------------------------

2.$NH_4^+$

-----------------------------------------------------------------------

3.$NO_2^-$

-----------------------------------------------------------------------

4.$Xn^{2+}$

-----------------------------------------------------------------------

5.$S_2O_3^{2-}$

-----------------------------------------------------------------------

c. குறித்த வெப்பநிலையில் கனவளவு S ஐ உடைய பாத்திரமொன்று A,B, C ஆகிய மூன்று வாயுக்களைக் கொண்டுள்ளது. பாத்திரத்தின் மொத்த அமுக்கம் H ஆகும். பாத்திரத்தினுள் Aயின் பகுதியமுக்கம் H/8 வாயு மூலக கூறுகளுக்கு இடையில் இடைவிசைகள் காணப்படவில்லை.
வாயுக்கள் A,B,C என்பவற்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது.

| வாயு | சார்அணுத் திணிவு | மூல் எண்ணிக்கை | மூலக்கூறுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| A | a | $x$ | |
| B | b | $3x$ | |
| C | c | | $y$ |

மேலே பந்தியிலும் அட்டவணையிலும் தரப்பட்ட எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.அவகாதரோ எண்

-----------------------------------------------------------------------

2.வாயு C இன் பகுதியமுக்கம்

-----------------------------------------------------------------------

3.வாயுக்கலவையின் திணிவு

-----------------------------------------------------------------------

4.வாயுக்கலவையின் அடர்த்தி

-----------------------------------------------------------------------

5.வாயுக்கலவையின் செறிவு

-----------------------------------------------------------------------

6.வாயு மூலக்கூறு ஒன்றின் வேகவர்க்க இடை

-----------------------------------------------------------------------


3.ஒவ்வொரு திட்டத்திலும் தரப்பட்டவற்றில் இருந்து மாத்திரம் சோதனைப் பொருட்களையும் கரைப்பான்களையும் தெரிந்தெடுத்து பின்வரும் தொகுப்புக்களின் திட்டங்கள் A, Bஆகியவற்றை நிறைவு செய்க.

* பொருத்தமான சேர்வைகளின் கட்டமைப்புக்களை பெட்டிகளினுள்ளும் சோதனைப் பொருட்களை/ கரைப்பான்களை வட்டங்களிலும் எழுதுக.

i. திட்டம் A

சோதனைப்பொருட்களும் கரைப்பான்களும்


⌬ dil HCl, Con HCl, Conc $H_2SO_4$, $NaNO_2$, $PCl_5$, $KMnO_4$, Anhyd. $AlCl_3$, $LiAlH_4$, $H_2O$, Mg




(தொடரும்)

# கணனி முடங்கிப் போய் நிற்கிறதா?

பல வேளைகளில் என்ன செய்தாலும் கணனி இயங்கா மல் அப்படியே இருக்கும். மொத்தமாக ஜடம் மாதிரி அமர்ந்து கொண்டு உயிர் இருக்கிறதா இல்லையா என்று நம்மைச் சந்தேகப்பட வைக்கும்? அப்படிப்பட்ட வேளைகளில் நாம் சில முதல் கட்ட சோதனைகளையும் முதலுதவி சிகிச்சைகளையும் செய்ய வேண்டியிருக்கும். அவை என்ன என்று இங்கு பார்க்கலாம்.




முதலில் நீங்கள் பார்க்க வேண்டியது அதற்கான பவர் சப்ளை. மின்சாரம் தரும் யு.பி.எஸ். சாதனத்தில் அதன் இயக்க நிலையைக் காட்டும் எல்.இ.டி. விளக்கு எரிகிறதா? அல்லது விட்டு விட்டு எரிகிறதா? அதற்கு பவர் போதவில்லை என்றால் அதனைச் சிறிது நேரம் சார்ஜ் செய்துவிட்டு பின் கணனியை ஒன் செய்திடலாம்.

யு.பி.எஸ். இயங்கா நிலையில் இருந்தால் சற்று நேரத்திற்குக் கணனியை நேரடி மின்சாரத்தில் இயங்க வைக்கலாம். இதற்கு கணனியின் மின் சக்தி கேபிள் சரியாக மொனிட்டரிலும் சி.பி.யு. விலும் செருகப்பட்டுள்ளதா என்று கவனிக்கவும். ஒருமுறை அதிலிருந்து எடுத்து மீண்டும் செருகிப் பார்க்கவும்.

அதன் பின்னும் கணனி இயங்கவில்லை என்றால்




இணைக்கும் பவர் கேபிள் சரியாக உள்ளதா என்று கவனிக்க வேண்டும். ஒரு வேளை அதிலும் பிரச்சினை இருக்கலாம். இதற்கு வேறு ஒரு கேபிள் கொண்டு வந்து இணைத்துப் பார்ப்பதே நல்லது. இந்த கேபிள் வழியாக கணனி இயங்கத் தொடங்கினால் கேபிள்தான் சரியில்லை என்று தெரிய வருகிறது. எனவே அதனை மாற்றுவதுடன் நம் பிரச்சினை தீர்க்கிறது.

அடுத்த வழியினைச் சோதித்துப் பார்க்கும் முன் முதலில் உங்கள் கணனி முழுமையாக ஷட் டவுண்ட் (Shat down) செய்யப்பட்டு மின் சக்தி அறவே நிறுத்தப்பட்டு விட்டதனை உறுதி செய்து கொள்ளுங்கள்.

அடுத்து உங்கள் கணனி சிறு சிறு பாகங்கள் அனைத்தும் ஸ்டேட் டிக் எலக்ட்ரிக்கல் சார்ஜ் பெறுவதில் மிகவும் சென்சிடிவ் ஆனவை என்பதை நினைவில் கொள்ளவும். எனவே நம் உடலில் உள்ள ஸ்டேட்டிக் மின்சா ரத்தை வெளியேற்றவும் இதற்கு அருகில் உள்ள இரும்பு கொண்ட சாதனத்தின் மீது கைகளை வைத்து எடுக்கவும்.

அடுத்து சிபியுவினைத் திறக்கவும். மறக்காமல் அதன் ஸ்குரூக்களை கவனமாக எது எந்த இடத்திலிருந்து எடுக்கப்படுகிறது என்பதற்கு அடையாளம் செய்து கொண்டு அவற்றை சிறிய டப்பா ஒன்றில் போட்டு வைக்கவும். பின் உள்ளே உள்ள அனைத்து இணைப்பு ,வயர் கார்ட்களும் சரியாக இணைக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

இதன் பின் சிபியுவின் மதர்போர்ட், ஹார்ட்டிஸ்க், பவர் பொக்ஸ் ஆகிய அனைத்திலும் இணைக்கப்பட்டுள்ள கேபிள்கள் சரியாகப் பொருத்தி உள்ளனவா என்று சரி பார்க்கவும். வீடியோ கார்டு, சவுண்ட் கார்டு, மொடம் அல்லது லேன் கார்ட் என அனைத்தையும் சரி பார்க்கவும். கவனமாக அனைத்தையும் நீக்கிப் பின் இணைக்கவும்.

இனி மறுபடியும் மின் கேபிள் உட்பட அனைத்தையும் சரியாக இணைத்தபின் கணனியை இயக்கிப் பார்க்கவும்.

இதிலும் சரியாக இல்லை என்றால் கணனி இயங்குவதற்கு அடிப்படையில் தேவையான உபகரணங்களை மட்டும் இணைத்து விட்டு மற்றவற்றை (மொடம், வீடியோ கார்ட் போன்றவை) நீக்கவும். பின் ஒவ்வொன்றாக அவற்றை இணைத்துப் பார்த்தால் இந்த உபரி சாதன இணைப்பில் பிரச்சினை இருந்தால் அதனை இணைக்கும் போது கணனி இயங்காமல் போவதனைப் பார்க்கலாம்.

கணனி பாகங்களைக் கழற்றி மீண்டும் இணைக்கையில் அதி தீவிர கவனம் தேவை. நீக்க முன் அது எப்படி இணைக்கப்பட்டுள்ளது என்று பார்த்து தேவையானால் குறித்துக் கொண்டு பின் நீக்கி மாட்டவும். சில கார்ட்கள் குறிப்பிட்ட திசையில் மட்டுமே இணையும். தவறான திசையில் முயற்சிக்கையில் இணைய மாட்டாது.

உடனே அங்கு பலத்தைப் பிரயோகித்து அழுத்த முயற்சித்தால் இரு பக்கமும் உடைந்து பலனில்லாமல் போய் விடும். சரியாக்குவதற்கு அதிகச் செலவாகும் சூழ்நிலை ஏற்படும். எதுவுமே சரியில்லை என நீங்கள் எண்ணினால் உடனே அதற்கான தொழில்நுட்பவியலாளரை அழைப்பதுதான் சரி.

# இணையத்தில் உலா வரும் சேர்ச் என்ஜின்கள்

இணைய உலகில் தேடுதலுக்கான சேர்ச் என்ஜின் என்றால் அது கூகுள்தான். அதன் வேகத்தையும், வகை வகையான வசதியையும் மிஞ்ச இன்னும் எந்த சேர்ச் என்ஜினும் வர வில்லை. இருப்பினும் அவ்வப்போது பல சேர்ச் என்ஜின்கள் இணையத்தில் கிடைக்கத்தான் செய்கின்றன.

முதலாவதாக www.lemmefind.us என்னும் தளத்தில் lemmefind என்ற ஜோர்ச் என்ஜின் உள்ளது. இதன் ஹோம் பேஜ் கவர்ச்சியாக இல்லை என்றாலும் கூகுள் போல் ஒன்றுமில்லாமல் இல்லை. தளத்தின் மேலாக ஒரு ட்ராப் டவுண் லிஸ்ட் ஒன்று கிடைக்கிறது. அதில் நாம் நாடுவாரியாக அல்லது உலக நாடுகள் அனைத்திலுமாக தேடுதலை வரையறை செய்திடலாம்.

ஜோர்ச் பொக்ஸ் அருகிலேயே பட்டன்கள் தரப்பட்டுள்ளன. இந்த பட்டன்களை கிளிக் செய்து தேடுதலைச் சுருக்கலாம். விரிக்கலாம். உதாரணமாக இதில் உள்ள பட்டன் இமேஜ் என்னும் பட்டனைக் கிளிக் செய்தால் ஒரு குறிப்பிட்ட இமேஜ் சார்ந்த தேடுதல் விடைகளை மட்டுமே உங்களுக்குக் காட்டப்படும்.

இதே போல, வீடியோ, ஓடியோ, மைஸ்பேஸ், விக்கிபீடியா எனத் தேடுதல் தளங்களைக் குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வரலாம். அது மட்டுமின்றி ஒவ்வொரு தேடுதல் விடையையும் உடனே வேறு நண்பர்களுக்கு ஈமெயில் மூலம் அனுப்ப வேண்டுமாயின் அதற்கு பக்கத்தில் கீழாக வசதி தரப்பட்டுள்ளது. மேலே சொன்னது போல் சுவாரஸ்யமான இன்னொரு தேடுதல் தளம் Joongel. இந்தத் தளம் தன் தேடுதலை அதனைப் பயன்படுத்துபவர் வாழும் இடத்திற்கேற்ப அமைத்துக் கொள்கிறது.

மேலும் கூகுள், ஹிட்வைஸ், கம்பீட், காம்ஸ்கோர், நீல்சன், நெட்ரேட்டிங்ஸ், குவாண்டெஸ்ட் மற்றும் பிற ஆய்வுத் தளங்கள் தரும் இன்டர்நெட் டிராபிக் ஆய்வின் அடிப்படையிலும் அமைக்கிறது.

இந்தத் தளத்தின் ஹோம் பேஜ் சென்றால் www.koongel.com பட்டன்கள், டேப்கள் எனக் குவிந்து கிடக்கின்றன. இதனால் தான் இதன் தேடல் முடிபுகள் சற்று தாமதமாகக் கிடைக்கின்றன. ஹோம் பேஜின் மெயின் இடத்தில் ஒவ்வொரு பிரபலமான ஜோர்ச் என்ஜினுக்கான பட்டன்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுடன் சில பிளாக்குகளுக்கும் பட்டன்கள் உள்ளன. பக்க வாட்டிலும் சில பட்டன்கள் தரப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு உங்கள் தேடல்களை வரையறை செய்யலாம்.

இதன் ஜோர்ச் சேர்ச் பொக்ஸ் திரையின் மேல் பாகத்தில் அமைந்துள்ளது. ஒரு சேர்ச் பட்டனுக்கு பதிலாக இரண்டு பட்டன்கள் தரப்பட்டுள்ளன. முதல் பட்டன் உங்கள் தேடலின் வகைக்கானது. இரண்டாவது தேடலை தொடங்கக் கட்டளை கொடுப்பதற்கானது. இந்த தளத்தின் பெயர் joongel என்றாலும் jungle என்ற சொல் திரிந்து வந்ததாகத்தான் இருக்கிறது. இன்டர்நெட் உலகை ஒரு காடு -jungle எனக் கொண்டு இந்த தேடுதல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்தின் சேர்ச் என்ஜின் தற்போது சோதனை நிலையில் தான் இயக்கப்படுகிறது. கொஞ்சம் தாமதமாக விடைகளை தருவதற்கு அதுவே காரணமாக இருக்கலாம்.

# மவுஸ் பைலை தூக்கிக் கொண்டு வருமா?

கணனியில் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக மவுஸ் மாறி விட்டது. லக்டொப்பிற்கான டச் பேட் மற்றும் கிராபிகல் பென் போல, மவுஸ் மாறிவிட்டது; செயல்படுகிறது. மவுஸ் இல்லாமல் கணனி இயக்கத்தை எண்ணிப் பாருங்கள் . அய்யய்யோ என்கிறீர்களா! ஆம் நிச்சயம் அது வெகு கஷ்டமான காரியம்.

குறிப்பாக இன்டர்நெட் அல்லது வழக்கமான செயல்பாடு இல்லாமல் மிகவும் ஹெவியான கணனி செயல்பாடாக இருப்பின் மவுஸ் இல்லாமல் இயங்குவது மிகவும் சிரமமான ஒன்றாக மாறிவிடும்.

இதற்குக் காரணம் மவுஸ் நம் பெரும்பாலான கணனிப் பணிகளை மிக மிக எளிதாக மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக "டிரக்டரி" ஒன்றில் உள்ள ஒரு பைலை மவுஸ் வருவதற்கு முன்னால் டாஸ்இயக்கத்தில் இன்னொரு டிரக்டரிக்கு மாற்ற வேண்டுமானால் டிரைவில் உள்ள கொமாண்ட் ப்ராம்ப்ட் என்னும் கட்டளைப் புள்ளியில் சரியான வகையில் அதன் வழியினை அமைத்து என்டர் தட்டவேண்டும்.

இதில் ஏதேனும் கூடுதலான ஒரு கமா, அல்லது இடை வெளி இருந்தால் கட்டளை நிறைவேறாது.மவுஸ் என்றால் அப்படியே இரண்டு எக்ஸ் புளோரர் விண்டோவினைத் திறந்து பைலின் மீது மவுஸின் கேர்சரை வைத்து அழுத்திப் பிடித்தவாறே இழுத்து வந்து போட்டு விடலாம்.

இது ஒன்றும் புதிய விடயம் இல்லை. கணனி பயன்படுத்தும் நாம் அனைவரும் செய்திடும் வேலைதான். இதில் என்ன இருக்கிறது என்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள்.

எப்படி வெவ்வேறு இடங்களுக்கு பைலை மவுஸ் மூலம் எடுத்துச் செல்கிறீர்கள். முதலில் பைலின் பெயர் மீது கிளிக் செய்கிறீர்கள்.

பின்னர் மவுஸின் இடது பட்டனை (இடது கைப்பழக்கம் இருந்தால் வலது பட்டன்) அழுத்தியவாறே இழுத்து எங்கு விட வேண்டுமோ அங்கு விட வேண்டும்.இடையே எங்காவது விட்டு விட்டால் என்னவாகும்? திருவிழாவில் தொலைந்த குழந்தை போல எந்த போல்டர் அல்லது டிரக்டரி என்று அறியமுடியாத இடத்தில் பைல் அமர்ந்து கொள்ளும்.

மவுஸைக் கட்டாயம் கவனமாக அழுத்தியவாறு தான் இந்த பைல் இடமாற்று வேலையைச் செய்திட வேண்டுமா? இதற்குப் பதிலாக விண்டோஸ் இயக்கத்திடம் எனக்குப் பதிலாக உன்னுடைய மவுஸை இந்த பைலைப் பிடித்து எடுத்துக் கொண்டு போகச் சொல்லு.

நான் அந்த நேரத்தில் ஒரு முறை கோப்பியைக் குடித்துக் கொள்கிறேன் என்று சொல்ல முடியுமா? முடியும். என்ன முடியுமா? எப்படி என்று ஆச்சரியப்பட வேண்டாம். விண்டோஸ் இயக்கத்தில் மவுஸ் பனலில் இந்த வசதி தரப்பட்டுள்ளது. மவுஸால் பைலை சிலநொடிகள் கிளிக் செய்திடலாம். பின் அப்படியே அந்தப் பைலை மவுஸ் பிடித்துக்கொள்ளும்.

நீங்கள் விரல்களை அல்லது கையை எடுத்துவிடலாம். அப்போது உங்கள் பைல் மவுஸுடன் தானாக லொக் ஆகி விடும். இதன் பின் மவுஸை அதன் பட்டனைப் பிடித்து அழுத்தாமல் அதனை மட்டும் இழுத்து பைலை வேண்டிய இடத்தில் விட்டுவிடலாம். இது எப்படி என்று பார்த்து செற் செய்வோமா?

இந்தத் தொழில்நுட்பத்தை(!) மேற் கொள்ள முதலில் Start பட்டன் அழுத்தித் திறக்கவும். பின் Control Panel ஐத் திறக்கவும். கொண்ட்ரோல் பனலில் நீங்கள் Classic View வினைக் கொண்டிருப்பது உறுதி செய்து கொள்க.


Category வியூவில் இருந்தால் மாற்றிக்கொள்க. இந்தப் பட்டியலில் ஜக்னைற் தேர்ந்தெடுக்கவும். இப்போது Mouse Properties விண்டோ கிடைக்கும். இந்த விண்டோவின் மேலாக உள்ள டேப்களைக் காணவும் Buttons என்று ஒரு டேப் காணப்படும்.


இந்த விண்டோவின் கீழ்ப் பகுதியைப் பார்க்கவும். இங்கு தான் Click Lock Properies காணப்படும்.இதில் "Turn on Click lock" என்று இருப்பதில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும் .

இப்போது கிளிக் லொக் செட்டிங்ஸ் பட்டன் தெரியும். இதில்கிளிக் செய்தால் ஒரு சிறிய விண்டோ எழுந்து வரும். இதுதான் கிளிக் லொக் செட்டிங்ஸ் விண் டோ. இதில் ஒரு பார் இருக் கும்.

இந்த பாரில் செட்செய் வதன்மூலம் (Short Long) மவுஸ் உங்கள் ஒப்ஜெக்டை எவ்வளவு நேரம் உங்களுக் காக பிடித்துக் கொண்டிருக்க வேண்டு மென்பதனை தீர்மானிக்கலாம்.

நீண்டநேரம் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றால் Long என்பதை




செலக்ட் செய்திடலாம். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த பைல் அல்லது ஒப்ஜெக்டை பிடித்துக் கொண்டிருக்கும் வேலையை நீங்கள் உங்கள் மவுஸ் மூலம் பிடித்துக் கொள்ளவில்லையே தவிர அதனை அதற்கென உருவாக்கப்பட்ட சொப்ட்வெயார் புரோகிராம் பிடித்து வைத்துக்கொண்டுள்ளது.

இதனைச் சோதனை செய்திட Short அருகே ஒரு புள்ளியில் செலக்ட் செய்து பின் மவுஸால் விண்டோவின் மேல் பாரில் கிளிக் செய்து பின் மவுஸை மட்டும் நகர்த்துங்கள். விண்டோ நகர்வதனைப் பார்க்கலாம்.

மவுஸின் பட்டனை அழுத்தாமல் விண்டோ நகர்வது ஆச்சரியமாக இல்லை! Long தேர்ந்தெடுத்தால் அந்த நேரத்திற்கு முன்பாகவே ஒப்ஜெக்ட்டை விடவேண்டும் என்றால் நீங்களாக மனுவலாக பட்டனை கிளிக் செய்து மேற்கொள்ள வேண்டும். இந்த கிளிக் லொக் செற்றிங் முடித்து அனைத்து ஓகே பட்டன்கள் மீது கிளிக் செய்து வெளியேறுங்கள். இனி மவுஸுக்கு பைல்தூக்கும்வேலையைக் கொடுங்கள்.

# புத்தாண்டில் உங்கள் ஆனி மாதப் பலன்கள்

கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 பாதங்கள், திருவாதிரை,புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை**

**நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய வேண்டும் என்று துடிக்கும் மிதுன ராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் சென்ற மாதத்தைக் காட்டிலும்இம்மாதத்தில் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். வக்ர குருவாக இருந்தாலும், கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் அதன்பார்வை யோகத்தையே வழங்கும். விலகிச் சென்றவர்கள் திரும்பி வந்து சேர்வர். வியாழ நோக்கம் உருவாகும். குடும்பப் பிரச்சினைகள் தீரும். கொடுக்கல், வாங்கல்களில் வளர்ச்சி ஏற்படும்.,

ராசிநாதன் புதன் மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் தனாதிபதி சந்திரன் குருவுடன் கூடியிருப்பதால் குருச் சந்திரயோக அடிப்படையில் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறப் போகின்றது. நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் . சூரிய பலம் கூடுவதால் அரசியலில் ஆதாயம் உண்டு. கேட்ட பொறுப்புகளைத் தலைமையிடம் உங்களுக்கத் தந்து விடும். தொழிலிலும், உத்தியோகத்திலும் இருந்த சலசலப்புகள் மாறும். தொல்லை தந்த எதிரிகள் மாறுவர்.

விஷ்ணு வழிபாடும், அனுமன் வழிபாடும் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் என்பதால் அதனை வழிபட்ட பின்னர் முக்கிய முடிவெடுப்பது நல்லது. பிரபலங்களின் நட்பால் பெருமைகளை அதிகம் சந்திக்கும் மாதமிது.

ராசி நாதன் பலம் பெறும் நேரம் தான் நமது உடல் உற்சாகமாக இருக்கும் நேரமாகும். அந்த அடிப்படையில் ஜுன் 24ஆம் திகதி முதல் மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார்.

எனவே இதுவரை மருத்துவத்திற்கு கட்டுப்படாத உடல்நிலை தானே சீர்படும். ஜீரணத் தொல்லையில் இருந்து சிறு சிறு காயங்கள் வரை ஏற்பட்டு வந்த உடல் தானாகவே சரியாகித் தக்க விதத்தில் மகிழ்ச்சியை வழங்கும். உறவினர் பகை மாறும்.

ஜுன் 29ஆம் திகதி ரிஷப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரய ஸ்தானம் வலுவடைகிறது.

எனவே வீண் விரயங்கள் ஏற்படாதிருக்க சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அடகு வைத்த தங்கங்களை மீட்டுக் கொண்டு வந்து, விற்றுப் புதிய தங்க நகை வாங்கி மகிழ்வீர்கள். தொழில் வரவும் செலவும் சீராகும்.

ஜுலை 2 ஆம் திகதி ரிஷப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். லாபாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பங்குதாரரிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். கடக புதனின் சஞ்சாரத்தால் மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும். மகிழ்ச்சிப் பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள நினைத்தவர்கள் அதற்கான அறிகுறிகள் தென்படுவதைக்கண்டு ஆச்சரியமடைவீர்கள். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். வீட்டுப் பராமரிப்பிலும் அக்கறை காட்டுவீர்கள. நடராஜர் வழிபாட்டை ஞாயிறு தோறும் மேற்கொண்டால் கடன் சுமை குறைய வழி

## கடகம்

**புனர்பூசம் 4–ஆம் பாதம், பூசம், ஆயிலியம் வரை**

**சொல்லைச் செயலாக்கிக் காட்டுவதில் வல்லவர்களாக விளங்கும் கடக ராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே சந்திரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் அவ்ரோடு குரு இணைந்து சஞ்சரிப்பதால் குருச் சந்திரயோகம் உருவாகிறது. எனவே வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்தி தரும். சேர்க்கைகளில் யார் நல்லவர்? யார் கெட்டவர்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள்.

செலவு நடைகள் கூடினாலும் நல்ல செலவாகவே வந்து சேரும் .ஜென்ம கேது ஆன்மிகத்தில் அதிக நம்பிக்கை வைக்கத் தூண்டும். சப்தம ராகு தன்னம்பிக்கையை உருவாக்கும். சனி விலகப் போகும் இந்த நேரத்தில் சஞ் சலங்கள் தீரவும் சந்தோஷங்கள் சேரவும் புதிய திட்டங்களை தீட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சனி வக்ர நிவர்த்தியானதால் இனி நன்மைகளையே வழங்கும் .குரு வக்ரம் பெற்றிருப்பதால் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலையில் இருந்தவர்கள் இனி முழுமையாக கடன் சுமைகளிலிருந்து விலகும் வாய்ப்பு கிடைக்கும்.

ஜுன் 24ஆம் திகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். சூரியனுடன் புதன் இணைவதால் கல்வி நலன் கருதியும் குழந்தைகளின் முன்னேற்றம் கருதியும் பெருந்தொகை செலவாகலாம். திடீர் பயணங்கள் ஏற்படும் ஆரோக்கியப் பாதிப்பு ஏற்பட்டு அகலும். புதிய நண்பர்களை நம்பி செய்த சில காரியங்கள் பாதியிலேயே நின்று போகலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து சேரும். பதவி மாற்றங்களும் பக்கபலமாக இருப்பவர்களின் சில மாற்றங்களும் உருவாகும்.

ஜுன் 29ஆம் திகதி ரிஷப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே ஆடை ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அழகு பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டும் முயற்சியில் கவனம் கூடும். வியாபர விருத்திக்காக புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்வீர்கள்.

ஜுலை 2ஆம் திகதி ரிசப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். சகோதர காரகன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சகோதரர்களால் உதவிகளும் ஒத் துழைப்புகளும் கிடைக்கும்.தொழிலுக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். பூர்விக சொத்துக்களில் தங்களுக்குரிய பங்கை உங்களிடம் ஒப்படைத்து நீங்களாக விரும்பித் தருவதை தாருங்கள் என்று சொல்வர். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும்.

ஜுலை 10ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். விரயாதிபதி ஜென்மத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் திடீர் விரயங்களை சந்திக்கலாம். ஒரு சில ருக்கு திடீர் இட மாற்றம் ஊர் மாற்றம் வந்து சேரும்.

இம் மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள் நடராஜரை தரிசனம் செய்து நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள். (தொடரும்)

# இராணுவத்தை அகற்றினால் மட்டுமே பலஸ்தீனத்துடன் பேச்சுவார்த்தை

## இஸ்ரேலிய பிரதமரின் உரைக்கு பலஸ்தீனம் கண்டனம்

இராணுவத்தை அகற்றினால் மட்டுமே பலஸ்தீனதேசம் ஒன்றின் உருவாக்கம் ஏற்கப்படும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தான் யாஹுவலியுறுத்தியுள் ளார்.

தனது பிரதான கொள்கைப் பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கு தொடர்பான இரு நாட்டு தீர்வு எண்ணக்கருவை ஏற்றுக்கொள்வது தொடர்பான இஸ்ரேலியப் பிரதமரின் முதலாவது உரை இது வென்பது குறிப்பிடத்தக்கது.நான் இதைத் தெளிவாக கூறுகிறேன். மேற்படி இராணுவத்தை அகற்றல் தொடர்பான உத்தரவாதம்எமக்குகிடைக்கப்பெறுமானால் இராணுவ நீக்கம் பெற்ற பாலஸ்தீனத்தின் பக்கமாக யூத தேசம் ஒன்றை கொண்டிருப்பதற்கான உடன் படிக்கை யொன்றை எட்ட நாம் தயாராகுவோம் என நெத்தான் யாஹு கூறினார்.

இந்நிலையில் பாலஸ்தீனம் நெத்தான் யாஹுவின் இருதேச தீர்வை நிராகரித்துள்ளது.

நெத்தான் யாஹு சமாதான செயற்கிரமத்தை ஸ்தம்பிதமடையச் செய்து விட்டார் என பலாஸ்தீன தலைவர் மஹ்மூத் அப்பாஸின் பேச்சாளர் நபில் அபூர் ரடெனாஹ் தெரிவித்தார்.

ஸ்ரேலிய பிரதமரின் கருத்தானது பாலஸ்தீனம் அரபு நாடுகள் மற்றும் அமெரிக்காவின் நிலைப் பாடுகளுக்கு சவால் விடுப்பதாகவுள்ளது என அவர் குற்றம் சாட்டினார்.

எனினும் நெத்தான் யாஹுவின் நிலைப்பாடானது முக்கிய முன்னடி எடுத்து வைப்பொன்றாக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இரு நாட்டு தீர்வுத்திட்டம் ஒன்றிற்கு இணக்கம் தெரிவிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஓபாமா இஸ்ரேலியப்பிரதமருக்கு வலி யுறுத்தி ஒரு சில வாரங்களிலேயே அவரது முக்கியத்துவ உரை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# 6 ஆம் ஆண்டு இதய அஞ்சலி

அன்னையின் மடியில் ♦ 28 ♦ 02 ♦ 1933



ஆண்டவன் பிடியில் ♦ 19 ♦ 06 ♦ 2003

## திரு கந்தையா-சிவர்ாசா-(சின்னக்கிளி)

யாழ்.கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் **திரு கந்தையா சிவராசா** (சின்னக்கிளி) முன்னாள் ஊழியர் யாழ். மாவட்ட வைத்திய சாலை தெல்லிப்பளை)

**வீதியிலே வீழ்ந்து விட்டீர்**
**விழி நீரைச் சொரிந்து விட்டோம்**
**பாதியிலே பிரிந்து விட்டீர்**
**பரிதவித்து நின்று விட்டோம்**
**நாதியற்றுப் போனீர் நல்லவரே**
**நம் இதயம் கனக்கிறது**
**நிதம் நினைந்துருகி அஞ்சலிக்கும்.**

*அன்பு மனைவி – அன்னரத்தினம்*
*பாசமிகு பிள்ளைகள் மருமக்கள்*
*பேரப்பிள்ளைகள்.*

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பளை. (2840)

# ஆப்கான் ஜனாதிபதி தேர்தலில் 41 வேட்பாளர்கள் போட்டி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் 41 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக அந் நாட்டு தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் இத் தேர்தலில் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாயியுடன் மேலும் 40 பேர் போட்டியிடுவதாகத் தெரிவித்த தேர்தல் அணையகத் தலைவர் அஸீஊல்லா லொடின் தகுதியற்ற பலர் வேட்பாளர்களாக தெரிவு செய்யப் பட்டுள்ளதை கண்டு அவமானமடைவதாகத் தெரிவித்தார்.

எனினும், அவர்களை வேட்பாளர் பட்டியலிலிருந்து அகற்ற தனக்கு அதிகாரமில்லை என அவர் கூறினார்.

2001ஆம் ஆண்டு தலிபான்களின் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்ததையடுத்து நடைபெறும் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும்.

இத்தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்களில் முன்னாள் நிதி அமைச்சர் அஷ்ரப் கயானி மற்றும் முன்னாள் வெளி நாட்டு அமைச்சர் அப்துல்லா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் அத்துடன் இரு பெண் வேட்பாளர்களும் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தலிபான்களின் வீழ்ச்சியை யடுத்து 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 18 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அத் தேர்தலில் ஹமீட் கர்ஸாய் 55 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். (6)

# 76 நாடுகளில் பன்றிக்காய்ச்சல் நோய் பரவியுள்ளது – உலக சுகாதார மையம்

உலகை அச்சுறுத்தி வரும் பன்றிக் காய்ச்சல் நோய் 76 நாடுகளில் பர வியுள்ளதாக உலக சுகாதார மையம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த நோயால் 35 ஆயிரத்து 928 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகம் முழுவதிலும் 163 பேர் பலியாகியுள்ளனர். இங்கிலாந்தில் ஆயிரத்து 226 பேரும்,அவுஸ்திரேலியாவில்ஆயிரத்து823பேரும், சீனாவில் 318 பேரும் பன்றிக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். பன்றிக்காய்ச்சல் நோய் தற்போது மொராக்கோ மேற்கு கரை மற்றும் காசா ஸ்டிரைப் பகு திகளிலும் பர வியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# முதுகலை பட்டம் பெற்ற 96 வயது முதியவர்

தைவான் நாட்டைச் சேர்ந்த சாவோ முஹேவுக்குவயது 96 அவர் ஒரு வைத்தியசாலையில் பணியாற்றி வந்தார். மிகவும் வயதாகி விட்டதால் அவரை வேலையில் இருந்து நீக்கி விட்டனர். வீட்டில் தனியாக வசித்து வரும் சாவோவுக்கு பொழுது போகவில்லை. ஆகவே நன்குவா பல்கலைக் கழகத்தில் தத்துவ பாடத்தில் முதுகலைப் பட்டப் படிப்பில் சேர்ந்தார். அவருக்கு பாடங்களை நினைவில் வைத்துக்கொள்வது தான் மிகவும் சிரமமாக இருந்தது.

இருப்பினும் பரீட்சைக்கு முன்னாள் நள்ளிரவில் எழுந்து விடியும் வரை படிப்பதை வழக்கமாக் கொண்டார். இதன் மூலம் ஞாபக சக்தியை வளர்த்துக்கொண்டார்.

பரீட்சையில் சித்தி பெற்றார். அவருக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதுகலைப் பட்டம் வழங்கப்பட்டது. (6)

ஒரு இலட்சியம் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. அது நடைமுறைக்கு சாத்தியமான நிலையிலும் இருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கைக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும். -ருசோ

வலம்புரி

# விசேட செயலணிக் கூட்டம் எங்கள் வில்லங்கம் போக்குமா?

யாழ்.மாவட்ட விசேட செயலணிக்கூட்டம் நாளை யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வன்னியுத்தம் முடிந்த பின்னர் நடைபெறுகின்ற இவ் விசேட செயலணிக்கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

'வடக்கின் வசந்தம்' என்ற மகுட வாசகத்தின் ஓர் அங்கமாக நடைபெறும் இக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் யாழ். குடாநாட்டு மக்களுக்கு எதை தரப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நீண்ட காலமாக யுத்த சூழமைவுக்குள் புரண்டு புண்ணாகி போன யாழ். குடாநாடு தன் ரணங்களை மாற்றிக் கொள்ள விசேட செயலணிக்கூட்டம் மருந்து கொடுக்குமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருக்கவே செய்கிறது.

எதுவாயினும் மருந்து கொடுப்பதற்கு முன்னதாக யாழ். குடாநாட்டுமக்கள் அனுபவிக்கும் நோய்களை முதற்கண் பட்டியுல் படுத்துவது நோய்வாய்ப்பட்டவனின் கடமையாகும்.

அந்தவகையில்,யாழ் குடாநாட்டின் மிகப் பெரும் வளமாகக் கருதப்படும் விவசாயம்,கடற்தொழில் விடயத்தில் அதீத கவனம் செலுத்தப்பட வேண்டும்.

போதிய உள்ளீடுகள் இன்மை,முதலீடுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு. உள்ளதையும் 'நிஷா' புயல் பறித்துவிட்ட சோகம். வெள்ளப்பாதிப்பு, வறட்சிக் கொடுமை இவை எதற்குமே நிவாரணமில்லாத பரிதாபத்துக்குள் சிக்குண்டுள்ள விவசாயிகள் இவர்களிடம் இருக்கக் கூடிய சோர்வு யாழ். குடாநாட்டின் அனைத்து மரக்கறிச் சந்தைகளையும் வெறிச்சோட வைத்துவிட்டது.

எனவே விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தின் மண்,வானம் பார்த்த பூமி என்ற பழிச்சொல்லிருந்து விடுபடவும், எங்கும் பசுமை பொலியவும் வாய்ப்பை ஏற்படுத்தும்.

இதேபோல் இலங்கையின் கடல் வள உற்பத்தியில் முதலிடம் வகித்த யாழ்ப்பாணம் கடல் எல்லைத் தடைச் சட்டங்கள்,மீனவர்களின் பாதுகாப்பின்மை போன்றவற்றால் கட்டுமரங்கள் முதல் பிளாஸ்ரிக் படகுகள் வரை நீண்டகாலம் கடற்கரை மண்ணில் அமிழ்ந்து போயுள்ளன.

எனவே நாளை நடைபெறுகின்ற விசேட செயலணிக்கூட்டம் எமது கடற்தொழிலாளர்களின் ஏக்க நோய்க்கு நல் மருந்து கொடுக்க வேண்டும்.

இதேபோல் கல்வி,உயர்கல்வி,மருத்துவம், போசாக்கு,வேலைவாய்ப்பு,தகவல் தொழில்நுட்பம்,வீதி திருத்தம்,தெருநாய்தொல்லை,கொட்டும் குப்பைகளை தினந்தோறும் அகற்ற முடியாமல் திணறும் உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி மற்றும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களின் எதிர்காலம், ஏற்கனவே பல வருடங்களாக இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு,பஞ்சப்பட்டு போன பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான உதவு தொகை என பெரியதொரு பட்டியலை யாழ். குடாநாட்டின் குறைபாடாக முன்வைக்கப்படுகிறது.

எங்கே பார்க்கலாம் விசேட செயலணி வில்லங்கம் போக்குமா? என்று.

# இனவாதம் , மதவாதம் பேசுவது கூட பௌத்த -சிங்கள அமைப்புக்கள் சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றன

## ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் குமரகுருபரன் விசனம்

(கொழும்பு)

இனவாதம் ,மதவாதம் பேசுவதில் கூட அடிப்படைவாத பௌத்த -சிங்கள அமைப்புக்கள் பாரிய சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றன.

ஆனால் , தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பினால் விசாரணையும் வெள்ளை வான் கடத்தலுமே பரிசாகக் கிடைக்கின்றன என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளரும்,மேல் மாகாண சபை உறுப்பினருமான நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

பௌத்த - சிங்கள இனவாதம் பேசுவோருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இனவாதம் பேசுவதில் சிங்களவருக்கு இருக்கும் உரிமை தமிழனுக்கு இல்லை. இனவாதம் , மதவாதம் பேசுவதில் கூட அடிப்படைவாத பௌத்த- சிங்கள அமைப்புகள் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டி ருக்கின்றன என்பது தான் உண்மை.

இந்த நாட்டில் ஒரு சிங்கள குடிமகன் , தமிழ்ச் சமுதாயத்திற்கு இருக்கக்கூடிய உரிமைகள் மற்றும் சமஷ்டித் தீர்வு குறித்துப் பேசினால் தாக்கப்படுகின்றான். விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவராக பார்க்கப்படு கின்றார். இதற்கு தனித்துவ சிந்தனைத் தெளிவு வீரியமற்ற புலனாய்வுத் தன்மையே காரணமாகின்றது.

தமிழனத்தின் உரிமைகள் பற்றி தமிழன் உரக்கக் குரல் எழுப்பினால் விசாரணை என்றும் வெள்ளை வான் கடத்தல் என்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் , ஜாதிக ஹேல உறுமயவினரோ அல்லது விமல் வீரவன்சவோ இன ஐக்கியத்தைக் குலைக்கும் வகையில் பேசினாலும் அவர்கள் விசாரணைக்கோ அச்சுறுத்தலுக்கோ உட்படுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு எந்தவித கட்டுப்பாடும் இல்லை.

தமிழன் உரிமைப் பற்றி பேசும்போது அத்தகையவர்கள் தாக்கப்படுகின்றனர். சிங்களவர்களின் உரிமையை இனவாதமாகப் பேசுபவர்கள் எத்தகைய அச்சுறுத்தல்களுமின்றி வாழ்கின்றனர்.

எனவே , சம உரிமை பேசுபவர்களும் இந்த நாட்டில் சிறுபான்மை என்று ஒன்று இல்லை. எல்லோருமே சமமானவர்கள் என்று பேசுபவர்கள் இந்த வேளையில் பாரிய பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பேரினவாதிகள் என்ற ஒரே காரணத்திற்காக அடிப்படை இன,மத , பேரினவாதம் பேசுபவர்களை தடுத்து நிறுத்தாவிடில் எந்த வகையிலும் சம உரிமையைப் பேண முடியாது.

நாட்டில் இனவாதம்பேசுவதற்கு ஹெல உறுமயவினருக்கும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கும் இருக்கும் உரிமை ,தமிழ் உரிமை பற்றி பேசும் சிங்களவர்களுக்கும் தமமிழர்களுக்கும் இல்லையா? எனும் கேள்வி எழுகின்றது. எனவே, இது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும். (6)

# பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள பாட சாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் இரண்டாம் தவணைக்குரிய உணவு விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டப் புனர் வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் ப.நோ.கூ சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே ப.நோ.கூ சங்கங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் உணவுப் பொருட்களை தமக்குரிய பாடசாலைகளிற்கு விநியோகித்து முடிக்குமாறு திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

# குண்டுத்தாக்குதல் நடத்தப்படுமென தகவல் வழங்கியவர் கைது

(கொழும்பு)

அலரி மாளிகையின் மீது குண்டுத் தாக்கதல் நடத்தப்படவுள்ளதாகவும் வெள்ளவத்தையில் தனியார் வங்கிக் கொள்ளையை தடுத்து நிறுத்துமாறும் தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதாக சந்தேகிக்கப்படும் இளைஞரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி இளைஞன் நேற்று முன்தினம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

வெள்ளவத்தையில் அமைந்துள்ள தனியார் வங்கி யொன்றில் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்படுவதாக பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல் வழங்கியுள்ள மேற்படி இளைஞன் அந்த கொள்ளைச் சம்பவத்தைத் தடுத்து நிறுத்துமாறும் கோரியுள்ளார்.

இதேவேளை அலரி மாளிகையின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகவும் மேற்படி தொலைபேசி இலக்கத்திலிருந்தே அழைப்பு வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த தகவல் குறித்து பொலிஸாருக்கு மட்டுமன்றி பொதுமக்களில் பலருடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ள மேற்படி இளைஞன் அவர்களுக்கிடையேயும் இந்த வதந்தியினைப் பரப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சந்தேகநபரை நேற்று முன்தினம் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அவ்விளைஞனிடம் தற்போது தொடர்ந் தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதுடன் விசாரணைகளை அடுத்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (6)

# நலன்புரி நிலையங்களிலுள்ள அங்கவீனர்களுக்கு செயற்கை அவயவங்கள் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 5 வீதமானவர்கள் பல்வேறு உபாதைக்குள்ளானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்களில் பிறவி அங்கவீனர்களும் போர் சேதம் காரணமாக அங்கவீனர்களாக்கப்பட்டவர்களும் காணப்படுவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவித்தார்.

நலன்புரிநிலையங்களில் இருக்கும் இத்தகைய பொதுமக்களுக்கான பல்வேறு வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார். நலன் புரிநிலையங்களில் உள்ள விசேட தேவையுடை யோர்களுக்காக 460 சக்கர இருக்கைகள் தேவைப்படுவ தாக அவர் குறிப்பிட்டார். இந்த சக்கர இருக்கைகள் நாளை வவுனியாவிற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நலன்புரிநிலையங்களில் கை மற்றும் கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# வெளிநாடுகளிலிருந்து மலர்கள் மற்றும் தாவரங்கள் இறக்குமதி தொடர்பான சட்டங்களை கடுமையாக்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து மலர் மற்றும் தாவரங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக அமுலில் உள்ள சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது..

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பல்வேறு தாவரங்களும் மலர் வகைகளும் விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாக சுங்க அத்தியட்சகர் பராக்கிரம பஸ்நாயக்க குறிப்பிட்டார்.

இத்தகைய மலர் மற்றும் தாவரங்களில் விவசாய நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வண்டுகள் ,கிருமிகள் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக இந்தியா போன்ற நாடுகளில் இருந்து பூமாலைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பதை தடை செய்யவும் சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தாவரங்கள் மற்றும் மலர் வகைகளை இறக்குமதி செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தின் அனுமதிப் பத்திரத்தை பெறவேண்டியது கட்டாயம் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் கொண்டுவரப்படும் தாவரங்களையும் மலர்களையும் விமான நிலையத்திலேயே தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுங்கத் திணைக்கள அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (6-4)

# சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

## நம்பிக்கை



இறந்தவர்கள் திரும்புவதில்லை ; கழிந்த இரவு மீண்டும் தோன்றுவதில்லை ; ஓய்ந்த பேரலை புதிதாக வருவதில்லை. அதுபோல் மனிதனும் அதே உடலில் மறுபடியும் புகுவதில்லை. ஆதலால் மனிதனே ,இறந்த காலத்தை வழிபடுவதைவிட்டு நிகழ் காலத்தை வழிபடுமாறு உன்னை அழைக்கின்றோம்.

கழிந்ததையெண்ணி வருந்துவதைத் தவிர்த்து தற்கால முயற்சிகளில் ஈடுபடுமாறு உன்னை அழைக்கின்றோம். மறைந்தும் அழிக்கப்படும் ஒழிந்த பாதைகளை தேடித்திருப்பவும் கண்டு பிடிப்பதில் ஆற்றலை வீணாக்குவதை விட்டு , பக்கத்தில் உள்ள அகன்ற புதிதாக அமைந்த பாதைகளை சேருமாறு உன்னை அழைக்கிறோம். புத்திசாலி இதை அறியட்டும்.

## உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)



ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பிரிவும் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து நடத்தும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான சித்திர, தனிப்பாடல், பேச்சு, சிறுகதை, கட்டுரை, நாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் பாடசாலை மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கி கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)


## ஆனி உத்தரத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் ஆலயத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு வருடாந்த ஆனி உத்தரத் திருவிழா கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. (6-72)

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் இம்முறை இரண்டாவது தடவையாகவும் வாழ்வகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்நிகழ்வில் வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரன், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொள்வதையும் விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றிய வாழ்வக மாணவர்கள் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.




## யாழ்.செய்திகள்

## குருவாக திருநிலைப்படுத்தல்

(குருநகர்)

அமலமரித்தியாகி சபையைச் சேர்ந்த சகோதரன் அமிர்தநாதன் இயூஜின் அடிகளார் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் அடைக்கலநாயகி ஆலயத்தில் யாழ். மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் தனது முதற் திருப்பலியை நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயப் பங்கில் நிறைவேற்றவுள்ளார். (6-39)

## பொன்விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமும் நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் பொன் விழா நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வலி கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ், யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், மக்கள் வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் திங்கள் முதல் ஆரம்பம்

(சாவகச்சேரி)

இடம்பெயர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலங்களில் தங்கியிருந்த மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமாவிலில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் இங்கு தங்கியுள்ள நிலைய மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி நலன்புரி நிலையங்களிலுள்ள மாணவர்களும் தற்போது சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களி லுள்ள மாணவர்களுடன் சேர்த்து 1200 மாணவர்கள் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கது. (6-4-29)

## கிறிஸ்து அரசர் திருவிழா

(ஊர்காவற்றுறை)

மெலிஞ்சி முனை கிறிஸ்து அரசர் திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரம்பன் பங்குத்தந்தை அருட்பணி ஏ-சி கிறிஸ்தோப்பர் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-72)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவிருந்து வட மாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற உயர் திரு ஆ.சிவசுவாமி அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்ற திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.




திக்கம் மத்திய சனசமூக நிலைய சமூகம்
திக்கம் -அல்வாய்.

(2843)


## மாபெரும் கலை விழா

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் மேற்கு சங்கானை பிரிவி னால் புற்று நோயாளர்களின் உதவி நிதியை மேம்படுத்த நடத்தும் மாபெரும் கலை விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி மேற்கு பிரிவின் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், வலி மேற்கு பிரதேச செயலர் திருமதி. தே. பாபு ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் செயலாளர் கு. பாலகிருஷ்ணன், வட்டு மத்திய கல்லூரி அதிபர் சபாரத்தின சிங்கி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் எஸ். குகராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகளின் 'நாட்டிய நாடகம்', 'மீனவ நடனம்', 'இராமாயாணக் காட்சி' நாடகமும், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவிகளின் 'மாலைக்காக வாதாடிய மைந்தன்' காத்தவராயன் சிந்து நடைக்கூத்து நாடகமும் வலி தென் மேற்கு பிரதேச செயலக கலாசார வேரவையின் 'தாவடி தங்கம்மா' நகைச் சுவை நாடகமும் வட்டு மத்திய கல்லூரி மாணவிகளின் 'இசைக் கச்சேரி'யும் இடம்பெறவுள்ளன. (6-134)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் அமைந்தள்ள நலன்புரி நிலைய அசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான அப்பியாசப் புத்தகங்கள், கொப்பிகள், உடுப்புகள், ஆவணங்களை பாதுகாப்பதற்கான பிரயாணப்பை போன்ற சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் யாழ் கல்வி வலயத்தால் கையளிக்கப்பட்டன. இப்பொருட்களை யாழ் வலய கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் வந்த குழுவினர் நேரடியாக வழங்கினர்.

யாழ் வலய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் உள் அமைப்புக்கள் இணைந்து நிதி பங்களிப்பு செய்ததன் ஊடாக இப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இக் குழுவின் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம், யாழ் இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம், சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப் பொன்ராஜா, சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஆகியோர் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-29)

# மெண்டிஸ் சுழலில் சுருண்டது நியூ.

# இலங்கை அரையிறுதிக்கு நுழைவு




(லண்டன்)

மெண்டிஸின் துல்லியமான சுழலின்மூலம் இலங்கை அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூ சிலாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடை பெற்று வருகிறது.

இதில் நேற்று நோட்டிங்காமில் நடைபெற்ற சுப்பர் 8 சுற்றின் 11 ஆவது போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இரு அணிகளும் இப் போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக் சுற்றுக்கு முன்னேறலாம்என்றகட்டாயத்தில்களமிறங்கின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் சரிவுகண்டது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜெயசூரியா தனது முதலாவது பந்தில் பூச்சியத்துடன் வெளியேறியதுடன் அடுத்து களமிறங்கிய சாமர சில்வாவும் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 3.5 ஓவர்களில் 25 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக டில்சானுடன் இணைந்த சங்கக்கார சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் டில்சான் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

எனினும் டில்சான் 37 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 48 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஜெயவர்த்தன அதிரடியாகத் துடுப் பெடுத்தாட இலங்கை அணி 13.3 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அணித்தலைவர் சங்கக்கார 35 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 35 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய முபாரக் 08 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இந்நிலையில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹெல ஜெயவர்த்தனா 29 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 41 ஓட்டங்களையும் மத்யூஸ் 06 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் விக்டோரி 2 விக்கெட்டுக்களையும் நதன் மக்குலம், மில்ஸ் மற்றும் பட்லர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 159 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு மக்குலம்-ரெட்மோன்ட் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் மக்குலம் 10 ஓட்டங்களுடன் வெளியேற நியூசிலாந்து அணி 3 ஓவர்களில் 30 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து குப்தில் களமிறங்க மறுமுனையில் ரெட் மோன் 13 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சோபிக்காத நிலையில் நியூசிலாந்து அணி 17 ஓவர்களில் 110 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் குப்தில் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 43 ஓட்டங்களை கூடுதலாக எடுத்தார்.

ரெய்லர் 08, ஸ்ரைரிஸ் 02, ஓரம் 07, மைக்லேசன் 02, நதன் மக்குலம் 02, அணித்தலைவர் விக்டோரி 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பினர்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் 3 ஓவர்களில் 9 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக் கெட்டுக்களையும் இசுறு உதான 2 விக்கெட்டுக்களையும் ஜெயசூரியா, முரளிதரன் மற்றும் மலிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி பிரிவு எப் இல் தான் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று முதலாவது தர அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்குத்திருப்பு முனை அமைத்த மெண்டிஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

## மேற்கிந்தியத்தீவுகள் அரையிறுதியில்; இங்கிலாந்து அணி பரிதாபத் தோல்வி

(லண்டன்)

விறுவிறுப்பான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் 10 ஆவது போட்டியில் மேற்கிந்திய தீவுகள்-இங்கிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பொப்ரா-பீற்றர்சனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரவி பொப்ரா 47 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் 19 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் ஷா 18 ஓட்டங்களையும் போஸ்ரர் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவோ 2 விக்கெட்டுக்களையும் பொல்லார்ட், பென், ஹைறயில் மற்றும் சிம்மோன்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் மழை கரணமாக ஆட்டம் தடைப்பட்டது. சில மணி நேரம் நீடித்த மழை விட மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகியபோது டக் - வேத் லூயிஸ் முறையில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 9 ஓவர்களில் 80 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சர்வான்-சந்தர் போலின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 8.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைக்குவித்து டக்-வேத் லூயிஸ் முறையில் 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சர்வான் 9 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 19 ஓட்டங்களையும் சந்தர்போல் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் 18 பந்துகளில் 37 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தனர்.




பிராவோ 13 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 18 ஓட்டங்களையும் ஹயில் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அன்டர்ஷன், சயிட் பொத் தம், பிரோட், ஸ்வான் மற்றும் ரஷீட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சர்வான் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியதீவுகள் அணி பிரிவு ஈ இல் 4 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

தோல்வியடைந்த இங்கிலாந்து அணி தொடரிலிருந்து விடைபெற்றது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (90)



பாகிஸ்தான் அணியுடனான முதலாவது லீக் போட்டியில் தோல்வியடைந்த இலங்கை அணி தனது இரண் டாவது லீக் போட்டியில் இந்திய அணியை சந்தித்தது.

1997ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற இப் போட்டியில் கட்டாய வெற்றிக்காக இலங்கை அணி இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் சந்தித்தது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

பந்து வீச்சில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து ராகுல் ராவிட்டை (61) வெளியேற்றி போட்டியில் திருப்பு முனை ஏற்படுத்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 229 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாலா

இந்நிலையில் பெப்சி தொடரில் தனது மூன்றாவது லீக் போட்டியில் இலங்கை அணி நியூசிலாந்து அணியைச் சந்தித்தது.

1997ஆம் ஆண்டு மே 20ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 214 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 11 பந்துகளில் 9 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூ,சிலாந்து அணி 44.5 ஓவர்களில் 162 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக் களையும் இழந்தது.



இதன் மூலம் இலங்கை அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (பயணிக்கும்)

# கப்பலில் எடுத்து வரப்பட்ட சீனி இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் 2 ஆயிரத்து 250 மெற்றிக் தொன் சீனி எடுத்துவரப்பட்டு இறக்கப்படுவதாக யாழ். அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார்.

இதில் 750 மெற்றிக் தொன் சீனி இறக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இன்று முதல் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தேவையான அளவு கோதுமை மாவும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள தாகவும் யாழ். அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார். (ச-5)

# கொரிய குடியரசின் இரு கப்பல்கள் நல்லெண்ண விஜயமாக வருகை

(கொழும்பு)

கொரிய குடியரசைச் சேர்ந்த இரண்டு கப்பல்கள் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி அமைச்சு மேலும் குறிப்பிடுகையில்;

சோய் யோங் மற்றும் டேசிங்யெங் எனும் பெயர்களைக் கொண்ட கொரிய கடற்படைக்கு சொந்தமான இக்கப்பல்களை இலங்கைக்கான கொரியத் தூதுவர் சொய் கீ சுல்லுடன் கொழும்பில் உள்ள 200 மேற்பட்ட தென் கொரிய மக்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்குச் சென்று வரவேற்றனர்.

கொழும்பு துறைமுகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த கப்பலை வரவேற்கும் வைபவத்தின போது இலங்கை கடற்படையினர் 21 துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து மரியாதை செலுத்தி இந்தக் கப்பலை வரவேற்றனர்.

இக் கப்பலிகளில் வடக்கில் இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு விநியோகிப்பதற்காக நிவாரணப்பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தென்கொரியாவினால் நட்புறவு அடிப்படையில் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட இப்பொருட்களை கப்பல்களிலிருந்து இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூன்று நாட்களுக்கு கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள இவ்விரு கப்பல்களும் எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படவுள்ளன.

இக் கப்பல்களில் வந்துள்ள தென்கொரிய கடற்படையினருக்கும் இலங்கைக் கடற் படையினருக்கும் இடையில் கப்பல் தரித்து நிற்கும் 3 நாட்களும் நட்புறவு ரீதியான விளையாட்டுப் போட்டி ஒன்று இடம்பெறவுள்ளது என்றும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# இடம் பெயர்ந்தோரை குடியமர்த்தல்

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு கிரான் கிரிமுட்டிப் பண்ணையில் தங்க வைக்கப்பட்டிருந்த 54 குடும்பங்களைச் சேர்ந்த 224 பொது மக்கள் நேற்று திருகோணமலை கிரிவெட்டிப் பகுதியில் உள்ள முகாமில் தற்காலிகமாக குடியமர்த்தப் பட்டுள்ளனர். சுமார் பத்து பேருந்துகளில் இம் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளின் கண்காணிப்பின் கீழேயே இந்த இறுதித் தொகுதி மக்கள் கிளிவெட்டி முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## மனப் பிரமையின்...

மிகப் பெரும் மனப் பிரமையில் இருப்பவர்கள் மருத்துவ ஆலோசனையை நாட வேண்டும்.

மற்றைய சிலர் இன்ரபோல் என்ற சர்வதேசப் பொலிஸிடமிருந்து இன்னும் தப்பித்து ஓட வேண்டிய தேவை இருக்கிறது.

அவர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். இலங்கையில் தமிழர்களிற்கு தங்கள் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்த தேவையான இடம் இல்லை என அவர்கள் கூறுவதே அவர்கள் எந்த மாதிரியான மனப் பிரமையில் இருக்கிறார் கள் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது.

தற்போதுள்ள இந்த அமைச்சரவையில் பல அமைச்சர்கள் தமிழர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களில் பல பேர் தமிழர்கள். இந் நிலையில் அவர்களது இவ்வாறான கருத்துக்கள் நகைப்பிற்கிடமானவை என்று அவர் தெரிவித்தார். (ச-14)

## அமைச்சர்களின்...

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் உட்பட மாகாண அமைச்சின் செயலாளர்கள் இன்று யாழிற்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் நாளை இடம் பெறும் கூட்டத்தைத் தொடர்ந்து மன்னாரில் விசேட செயலணிக் கூட்டம் நடைபெறுவதனை முன்னிட்டு நாளை மறு தினம் கொழும்பு திரும்புகின்றனர். (ச-5)

## அத்தியாவசிய பொருட்...

லொறிகள் இன்று சோதனை யிடப்பட்டு புறப்படுவதற்கு அனு மதி அளிக்கப்படும்என பாதுகாப்பு அமைச் சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் போக்குவரத்து சேவை ஒன்றின் 22 லொறிகள் கடந்த வாரம் சோதனையிடப்பட்டு அனுமதி அளிக்கப்பட்ட போதும் நேற்று பாதுகாப்பு அமைச்சின் விசேட உத்தரவில் மீள கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேள் ஏ-9 பாதை ஊடாக செல்லவுள்ள லொறிகள் அநுராதபுரத்தில் சோதனையிடப்படுவதால் செலவுகள் அதிகம் ஏற்படுவதாக வர்த்தகர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அடுத்த வாரம் முதல் மொரட்டுவப் பகுதியில் சோதனைச் சாவடி அமைக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

## ஜனாதிபதி...

நாடுகளுக்கிடையிலான சமய, கலாசார, வர்த்தக மற்றும் உல்லாச பயணத்துறை என்பவற்றை மேலும் மேம்படுத்துவது குறித்து கலந்துரை யாடல்களை மேற்கொண்டார்.

இலங்கையிலிருந்து பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தற்கொலை குண்டுதாரி...

மேற்கோள்காட்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

பொதுமக்கள் செறிந்து வாழும் நகரப் பகுதிக்குள் நுழைந்திருக்கும் அவர்கள் இதுவரை தமது இலக்குகள் மீது தாக்குதல் நடத்தாமை ஆச்சரியம் அளிப்பதாக அந்த அதிகாரி கூறியுள்ளார்.

உத்தரவுகளை வழங்கவோ அல்லது வழி நடத்தவோ தலைமைத்துவம் இல்லாது போனதால் இந்த தற்கொலைப் படையினர் சோர்வு அடைந்திருப்பதாகவும் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன.

கொழும்பு நகரில் இவ்வாறு ஒளிந்து இருக்கும் விடுதலைப் புலிகளின்தற் கொலைப் படையினரை கைது செய்வதற்கு விசேட இராணுவ மற்றும் பொலிஸ் பிரிவுகள் செயற்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ச-5)

## உணவையும் உடை...

இந்த அப்பட்டமான பேரினவாத அரசியலுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் அணி திரள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். மனோ எம்.பி மேலும் தெரிவித்துள்ளதாவது;

தடுப்பு முகாம்களில் இருத்தி வைக்கப்பட்டிருக்கின்ற மக்கள் அனைத்தையும் இழந்த நிலையில் இருக்கின்றார்கள். குழந்தைகளும் வயோதிபர்களும் அநாதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். பெரும்தொகையான பெண்கள் தனித்து பாதுகாப்பற்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

பெருந்தொகையானோர் காயப்பட்டும் பத்தில் ஒருவர் அங்கவீனமாகியும் உள்ளார்கள். உணவும் மருந்தும் அடிப்படை வசதிகளும் பாரிய பற்றாக் குறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

எல்லாவற்றிக்கும் மேலாக ஒட்டு மொத்தமான அகதிவாழ்க்கை வாழும் மக்களின் தனிப்பட்ட அடையாள விபரங்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. விசாரணைக்காக அழைத்து செல்லப்படுபவர்கள் பற்றிய தரவுகள் தரப்படுவதில்லை.

இத்தகைய ஒரு நிர்கதியான நிலையில் வாழ்கின்ற மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலைப் பற்றியும் அரசியல் தீர்வைப் பற்றியும் சிந்திப்பதற்கு ஒரு போதும் அவகாசம் இருக்க முடியாது.

பாரம்பரிய மிக்க எமது மக்களைக் கையேந்தி இருந்து வாழும் மக்களாக தடுத்து வைத்துக்கொண்டு அவர்களது அரசியல் அபிப்பிராயங்களை பற்றி கருத்து தெரிவிப்பது அப்பட்டமான மனிதாபிமானமற்ற செயலாகும் என்றார். (ச-5)

## தீர்வை அண்மித்திருந்த வேளை...

சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் இணங்க வைக்க நாம் தவறிவிட்டோம். இந்தியா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் சமஷ்டி முறை பின்பற்றப்படுகிறது என்று குறிப்பிட்ட எரிக் சொல்ஹெய்ம், ஆரம்பத்தில் சமஷ்டி முறையில் தீர்வு காண இணக்கம் காணப்பட்டது.

இலங்கையிலுள்ள அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் பின்னர் அதனை ஏற்றுக்கொள்ள பிரபாகரனோ அல்லது இலங்கை அரசாங்கமோ தயாராகவிருக்கவில்லை என பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

குறைந்தது 10 தடவைகள் பிரபாகரனை நான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். போர் நிறுத்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்ட பின்னர் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என பிரபாகரன் வழங்கிய உறுதி மொழி நிறை வேற்றப்பட்ட போதும் பின்னர் அவரால் அதனைக் கடைப்பிடிக்க முடியாது போனது.

மோதல்கள் இறுதிக் கட்டத்தில் இருந்த போது ஆயுதங்களைக் கைவிட்டு வெள்ளைக் கொடிகளுடன் அரசாங்கப் படைகளிடம் சரணடைவதே உயிர் தப்புவதற்கான ஒரேயொரு வழியெனத் தாம் விடுதலைப் புலிகளுக்கு கூறியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது மோதல்கள் முடிபுக்கு வந்துள்ளன. தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய காலம் வந்துள்ளது. அனைத்து சமூகங்களினதும் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து தீர்வொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

அதே நேரம் இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் மனித நேய அமைப்புக்களும் தடையின்றி சென்று வருவதற்கான அனுமதி குறித்து இணைத் தலைமை நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தனிநாடு கோரி போராடி வந்த விடுதலைப் புலிகள் அமைப்பு 2001ஆம் ஆண்டு முதன் முறையாக ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தது. இதனைத் தொடர்ந்து இரு தரப்பும் போர் நிறுத்த மொன்றுக்குச் செல்ல இணங்கியதுடன் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நோர்வேயின் அனுசரணையுடன் ரணில் விக்கிரசிங்க தலைமையிலான அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கிலிருந்த மக்கள் சுமுகமான வாழ்க்கையை அமைக்கத் தொடங்கினர். வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் பகுதிகள் அரசாங்கக் கட்டுப் பாட்டுப்பகுதிகள் என வரையறுக்கப்பட்டன. புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் செல்வது தடுக்கப்பட்ட அதே நேரம் விடுதலைப் புலிகளும் ஏனைய பகுதிகளுக்கு சென்று அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட இணக்கம் காணப்புட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி சாதாரண நிலையொன்று ஏற்பட்டதைத் தொடர்ந்து சமாதானத்துக்கான காலம் கனிந்தது. போர் நிறுத்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் 2002 ஆம் ஆண்டே ஆரம்பமாகின.

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தில் நடைபெற்றன. 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நோர்வேயில் நடைபெற்ற மூன்றாவது சுற்று பேச்சு வார்த்தையில் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட உள்ளக சுயநிர்ணய உரிமையொன்றுக்கு இரண்டு தரப்பும் இணங்கியிருந்தன.

அதன் பின்னர் நடைபெற்ற ஏனைய மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் உள்ளக சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

எனினும்ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற நிலையில் 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த் தையிலிருந்து ஒரு தலைப்பட்சமாக விலகிக் கொண்டனர்.

அதன் பின்னர் தென்பகுதி அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டு 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார்.

அவரின் ஆட்சிக் காலத்திலும் நோர்வேயின் அனுசரணையுடன் 2006 ஆம் ஆண்டு இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இந்த பேச்சு வார்த்தைகளில் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி அதிகளவில் பேசப்படாத நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து வெளியேறினர். அதனைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டு இரு தரப்புக்கும் இடை யிலான சமாதான முயற்சிகள் முடிபுக்கு வந்து மோதல்கள் ஆரம்பித்தன. (ச-5)


# மக்கள் வங்கி

## நகைகளுக்கான ஏலவிற்பனை

31.12.2007 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாது இருந்த மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையினதும், காங்கேசன்துறைக் கிளையின் மல்லாக நீடித்த பீடத்தினதும் 2009 ஆனி மாதத்தில் நடைபெறவிருந்த நகைகளின் ஏல விற்பனையானது தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம். ஏல விற்பனைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

உதவிப் பொது முகாமையாளர்
வட வலயம்
16.06.2009

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்

(C-2595)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.